வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk    மலர் : 04    05.05.2023 வெள்ளிக்கிழமை    இதழ் : 147    பக்கங்கள் : 16





## தையிட்டி விகாரைக்கு எதிராக

# இரவிரவாக தொடரும் மக்களின் போராட்டம்

■பொலிஸ் அச்சுறுத்தல் தொடர்கிறது
■இன்றும் போராட்டம் தொடரும்
■சகல கட்சி எம்.பிக்களும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், மே 05

தையிட்டியில் தமிழ் மக்களின் காணியில் அடாத்தாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றவும் - காணிகளை விடுவிக்கவும் கோரிய போராட்டம் நேற்றும் இரவிரவாக தொடர்ந்தது. இதேநேரம், இந்தப் போராட்டம் இன்று வெள்ளிக்கிழமையும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அதிகளவான மக்கள் இந்தப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

15

## விகாரையில் வழிபாட்டுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது!

■போராட்டம் நடத்த தனி இடம்
■மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், மே 05

தையிட்டி விகாரை வழிபாட்டுக்கோ அங்கு நடைபெறும் நிகழ்வுகளுக்கோ எந்த இடையூறும் ஏற்படுத்தாது போராட்டத்தில் ஈடுபடலாம் என்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

15

## போரை வென்ற எமக்கு உங்களை எப்படி நடத்துவது என்று தெரியும்!

பொலிஸார் மிரட்டினர் என்கிறார் கஜேந்திரன்

யாழ்ப்பாணம், மே 05

“நாங்கள் யுத்தத்தை வென்றவர்கள். உங்களை எப்படி நடத்துவதென எங்களுக்கு தெரியும்“ என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் மிரட்டினார். அவரின் மனதில் கொலைவெறி இருந்ததை பார்க்க முடிந்தது - இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த்

15

## யாழ். அபிவிருத்தி குழு கூட்டம் தமிழ் எம். பிக்கள் வெளிநடப்பு!

யாழ்ப்பாணம், மே 05

தையிட்டி விகாரைக்கு எதிராக நடத்தப்படும் போராட்டத்துக்கு ஆதரவாக கட்சி பேதங்கள் கடந்து யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தி லிருந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று வெளிநடப்பு செய்தனர்.

யாழ். மாவட்ட செயலக அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

15



## அங்கஜன் எம். பி. கொடுத்த உணவு, பானம் குப்பையில்!

யாழ்ப்பாணம், மே 05

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் போராட்டக்களத்தில் இருந்தவர்களுக்காக வழங்கப்பட்ட சிற்றுண்டிகளும், பானங்களும் குப்பையில் வீசப்பட்டமை பலரையும் முகஞ்சுழிக்க செய்துள்ளது.

தையிட்டி விகாரையை அகற்ற கோரி நேற்றைய தினம் புதன்கிழமை முதல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

15



தையிட்டி விகாரைக்கு எதிராக போராடி வரும் மக்களுக்கு ஆதரவாக நேற்று யாழ். மாவட்டத்தின் அனைத்துக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளும் ஒன்றாக போராட்டத்தில் பங்கேற்றவேளை...!

## வல்வையில் இன்று இந்திரவிழா!

வடமராட்சி, மே 05

பிரசித்தி பெற்ற வல்வெட்டித்துறை இந்திர விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதையொட்டி அந்தப் பகுதி முழுவதும் மின்னொளியால் அலங் கரிக்கப்பட்டு ஆயத்தங்

15

## ஒட்டுசுட்டானில் காணி கேட்கும் இராணுவத்தினர்

முல்லைத்தீவு, மே 05

ஒட்டுசுட்டான் நகர மையப் பகுதியில் 25 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவ முகாம் அமைக்கும் தேவைக்காக 64ஆவது படைப் பிரிவு கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று வன்னி பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

15

## இனப்பிரச்னை தீர்வு விவகாரம்
## வடக்கு - கிழக்கு எம்.பிக்களுடன் ஜனாதிபதி மூன்று நாள் பேச்சு



யாழ்ப்பாணம், மே 05

இனப் பிரச்னை தீர்வு விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அடுத்த வாரத்தில் 3 நாட்கள் தொடர்பேச்சு நடைபெறவுள்ளது.

15

# காய்ச்சல் வந்தால் கட்டாயம் மருத்துவமனை செல்லுங்கள்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, மே 05

கோவிட் தொற்றை இன்புளுவன்ஸா வைரஸ் நோய் நிலைமையிலிருந்து வேறுபடுத்தி கண்டறிய முடியாது. எனவே, தற்போது காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல வேண்டியது அத்தியாவசியமாகும் என இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் வின்யா எஸ்.ஆரியரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது. இந்த

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

பதின்மூன்று என்பது அதிர்ஷ்டம் இல்லாத இலக்கம் என்ற ஒரு நம்பிக்கை உலகம் எங்கும் இருக்கின்றது. அந்த நம்பிக்கை என்பது ஆஸ்பத்திரிகளில் பதின்மூன்றாம் வார்ட் இருக்காது. அதிகம் ஏன் விமானத்தில் பதின்மூன்றாம் இலக்கத்தில் ஆசனம்கூட இருக்காது. அந்த அளவுக்கு அது ஒரு ராசி இல்லாத இலக்கம் என்று உலகம் முழுவதும் நம்புகின்றது.

மூட நம்பிக்கைக்கு அளவு இருக்கவேண்டும் என்பார்கள். ஆனால், அதனை ஏனோ மூட நம்பிக்கை என்றும் அளவெடுக்காமல் விட்டுவிட்டர்கள்.

நமக்கும் இந்த பதின்மூன்று ஒரு ராசியில்லாத இலக்கமாக நீண்டகாலமாகவே இருந்து கொண்டிருக்கின்றது.

இலங்கை அரசியலமைப்பில் பதின்மூன்றாவது திருத்தமாக செய்யப்பட்ட அந்தத் திருத்தமே இலங்கையில் ஒன்பது மாகாணங்களிலும் சபைகளை உருவாக்கியது.

இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதையே பிரதான இலக்காகக் கொண்டு, இலங்கையும் இந்தியாவும் ஒப்பந்தம் செய்து கொண்டதும் - அந்த ஒப்பந்தத்தின் பலனாக இந்த அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டதும் நாம் அறிந்ததுதான்.

அந்தத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதை உறுதிசெய்யவேண்டியது எப்படி இந்தியாவின் கடமையோ, அதுபோல அந்தத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது- இலங்கையின் கடமை. இன்று அரசியலமைப்பு சட்டத்தில் இருப்பதை செய்ய மறுப்பதும் அரசியலமைப்பை மீறிய செயல்தான்.

அதனை ஒருதடவை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதனை எதிர்ப்பவர்களுக்கு தெரிவித்திருந்தார்.

அரசியலமைப்பில் இருக்கின்ற ஒரு விடயத்தை செய்யக்கூடாது என்பவர்கள், அதனை நீக்குகின்ற திருத்தத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். இல்லையேல், ஒரு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்ற அடிப்படையில் அதனை நிறைவேற்றவேண்டியது தனது கடமை என்று ரணில் ஒரு தடவை தெரிவித்திருந்தார்.

பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறும் கோரி இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுவதற்கு தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணியை ஆரம்பித்த ரெலோ கடைசியில் அதில் வெற்றிபெறதும் பழைய சங்கதிகள்.

அந்தக் கோரிக்கைக் கடிதம் பற்றி பல தடவை இந்தப் பத்தியில் கூறியாகிவிட்டது. ஆனால், அந்தக் கடிதம் எழுதுகின்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளை மாத்திரமே சேர்த்துக்கொண்ட ரெலோ, மனோ கணேசனையும் ரவூப் ஹக்கீமையும்கூட அதில் கையெழுத்திட வைக்க விரும்பியது.

இந்த விடயங்கள் நடந்து கொண்டிருந்தபோது, பதின்மூன்றுக்கு ஆதரவான வேறு சில தமிழ் கட்சிகள் தாமும் ஒன்று கூடிப்பேசி அதுபோன்ற ஒரு கோரிக்கையை முன்வைத்தன.

ஈ. பி. ஆர். எல். எவ். பத்மநாபா அணியினரின் தமிழர் சமூக ஜனநாயக் கட்சி, மு. சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி, திருகோணமலை எந்திரி விக்னேஸ்வரனின் தமிழர் மகா சபை, பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்து கட்சிகள் ஒன்றுகூடி இந்த கோரிக்கையை விடுத்தன.

பின்னர் மிக அண்மையில் தமிழர் மகா சபை விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் கூட்டணித் தலைவரும் முன்னாள் வடக்கு முதலமைச்சருமான சி. வி. விக்னேஸ்வரனை அவரின் இல்லத்தில் சந்தித்து பேசியதும் அந்த சந்திப்பில் வடக்கு ஆளுநர் கலந்துகொண்டதும் செய்திகளாக வெளிவந்தன.

இப்போது அந்த சந்திப்பின் தொடர்ச்சியாக மீண்டும் பதின்மூன்றை வலியுறுத்தி ஒரு கோரிக்கை மனுவில் தமிழ்க் கட்சிகளின் கையொப்பத்தைப் பெறும் முயற்சி நடப்பதாகத் தெரியவருகின்றது.

அந்தக் கோரிக்கை மனுவில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் 154ரி உறுப்புரையின் பிரகாரம் - ஆலோசனை சபையை நியமிக்க ஜனாதிபதியை கோரும் யோசனைகளும் இடம்பெற்றிருக்கின்றனவாம். மாகாண சபைகள் மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளால் ஆளப்பட்டாலும் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கென்று மேலதிகமாக ஓர் ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் அடுத்த தேர்தல் நடக்கும்வரை அந்த சபையே அதனை நிர்வகிக்கவேண்டும் என்ற கோரிக்கையும் இந்த மனுவில் இடம்பெற்றிருக்கின்றனவாம்.

இந்தக் கோரிக்கைகளை இலங்கை அரசிடம், அதாவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக வலியுறுத்த அவர்கள் எடுக்கும் முயற்சிக்கு பல தமிழ்த் தேசியக் கட்சிகள் இணங்கவில்லை என்று தெரியவருகின்றது. ஆலோசனை சபையை அமைத்தால் தேர்தலை இன்னமும் பிற்போட அரசுக்கு உதவுவதாக ஆகிவிடும் என்பது குறித்து யாரும் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பெறுபேறாக உருவானது. அதனை அமுல்படுத்த வைக்கவேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. ஏற்கனவே, இந்தியாவிடம் தமிழ்க் கட்சிகள் அந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கடிதம் எழுதிவிட்டன.

இந்த நிலையில் நேரடியாக இலங்கை அரசுடன் அது விடயமாக பேசத் தொடங்கினால், இந்தியா அழுத்தம் கொடுக்கின்றவேளைகளில், நாங்கள் தமிழர் தரப்புடன் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று இந்தியாவை புறம் தள்ளிவைக்க உதவியதாக ஆகிவிடும் என்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் வாதமும் நியாயமானதுதான்.

அதைவிட இந்த மாகாண சபைகளுக்கு ஆலோசனை சபை ஒன்றை அமைக்கவேண்டும் என்ற யோசனை இப்போது சரியானதுதானா என்பதை பின்னர் பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

# முன்பள்ளி கல்வி தேவைகள் குறித்து கிளிநொச்சியில் ஒருநாள் கருத்தரங்கு

கொழும்பு, மே 05

முன்பள்ளி மழலைகளின் கல்வித் தேவைகள் தொடர்பான ஒருநாள் கருத்தரங்கு கிளிநொச்சியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் இலங்கை கல்விக் குழுமத்தின் தலைவரான யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழிப் பயிற்சிகள்' - யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, 'பாடசாலைக் கல்வி முறைகளில் அதிகரித்துவரும் சமமின்மைகள்' - யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் மா. சின்னத்தம்பி, 'சிந்தனை விருத்தியும் மொழியும்' - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு. பரமானந்தம், 'கல்விசார் விழிப்புணர்வுக்காக இணையதளங்கள்' - கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், 'கல்விச் சுடர் வெளியீடு எதிர்கொள்ளும் சவால்களும் சாத்தியங்களும்' - கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார், 'முன்பள்ளிக் கல்வி பற்றிய தேசிய கொள்கை மற்றும் முன்பள்ளிக் கல்விக்கான வடக்கு மாகாண கொள்கை' - வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளர் அருள் உமா மகேஸ்வரன், 'கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகளும் பெற்றோர்களும்' - முன்னாள் வட மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா ஆகியோர் வழங்குவர்.

தொடர்ந்து, 'முன்பள்ளி மழலைகளின் உணவு, போசாக்கு உணவு, சுகாதாரம்' - யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, 'முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இயலளவு தகைமை விருத்திப் பயிற்சி' - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா. தனபாலன், 'முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகைமைகள், பயிற்சிகள்' - ஓய்வுபெற்ற பிரதி பரீட்சைகள் ஆணையாளர் செல்வரூபி ஸ்கந்தராஜா, 'முன்பள்ளிக் கல்வி' - யாழ் இந்து மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் வேதநாயகி பேரின்பநாதன், 'பாலர் வகுப்பு மாணவர்களுக்கான பொருளாதாரத் திட்டம்' - வவுனியா பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ந. ரவீந்திர குமாரன், 'முன்பள்ளி மழலைகளின் கல்வித் தேவைகள்' - மாகாண பணிப்பாளர் சு. சற்குணராஜா, 'முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனம், ஓய்வு ஊதியம்' - யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அகிலன் கதிர்காமர், 'முன்பள்ளிகளுக்கு அறவிடப்படும் நிதி' - புற்றளை முன்பள்ளி ஆசிரியை பத்மலோஜனி சத்தியலிங்கம் ஆகியோர் காலை முதல் மதியம் வரை விளக்கங்களை வழங்குவர்.

இதன் பின்னர், 'தொழில் திணைக்களத்தின் பங்களிப்பு' - சிவரஞ்சினி சிவச்செல்வன், உதவித் தொழில் ஆணையாளர், வவுனியா, 'முன்பள்ளிகளின் நிதிப்பற்றாக் குறைகளைக் தீர்க்கும் வழிகள்' - ம. சூரியசேகரம், இயக்குனர், இலங்கை கல்விக் குழுமம், முன்பள்ளி ஆசிரியைகளின் மகத்தான பணி' - சுவர்ணா நவரத்தினம், முன்னாள் கல்விப் பணிப்பாளர், இசுருபாய, கொழும்பு, 'மன்னார் மாவட்ட முன்பள்ளிகளின் நிலை' - மு. சிவானந்தன், ஆசிரிய ஆலோசகர், உளவளத் துறை, மன்னார் கல்வி வலயம், 'முன்பள்ளிகளின் அபிவிருத்தியில் பெறோர்களின் பங்களிப்பு' - அ. சூரியகுமார், மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பாளர், கல்விக் குழுமம், 'தீவக சிறுவர்களின் கல்வியை முன்னெடுக்க உந்தும் சமூக தேவைகள்' - செ. மகேஷ், தீவுப்பகுதி வலய ஒருங்கிணைப்பாளர், கல்விக் குழுமம் ஆகியோர் பிற்பகல் வேளை விரிவுரைகளை வழங்குவர். (ஐ)

# ரூ. 50 இலட்சம் காப்புறுதி பணத்துக்காக காதலியை திட்டமிட்டு கொன்றவர் கைது!

கொழும்பு, மே 05

இளம் பெண்ணின் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆயுள்காப்புறுதி பணத்தைப் பெறுவதற்காக, நண்பருக்கு 20 இலட்சம் ரூபாய் தருவதாகக் கூறி காதலியை வாகனத்தால் மோதி கொலை செய்வித்த காதலனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காலி - நியாகம - பிட்டிகல மானமிபிட்டிய, தல்கஸ்வல பகுதியில் அருகில் நின்றிருந்த யுவதியொருவர், கடந்த மாதம் 30ஆம் திகதி சிறிய ரக லொறி மோதி உயிரிழந்தார்.

விபத்தில், பிட்டிகல தல்கஸ்வல பகுதியைச் சேர்ந்த நிரோஷா உதயங்கனி என்ற 32 வயதான பெண்ணே உயிரிழந்தார்.

இந்தப் பெண்ணுக்கு திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்த நபரை நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இந்தக் கொலை சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் மறுநாள் மாபலகம வீதியில் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் பெண்ணை லொறியால் மோதி கொலை செய்த குறித்த வாகன சாரதி தப்பியோடி தலைமறைவாகி விட்டாரெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்த காதலி, 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 4 ஆயுள் காப்புறுதிகளை செய்திருந்தார். இந்த பணத்தை எடுப்பதற்காகவே இந்தக் கொலையை திட்டமிட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. தனது உற்ற நண்பனிடம் கொலையை செய்யுமாறு கேட்ட காதலன் அதற்காக 20 இலட்சம் ரூபாய் தருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பெண்ணின் காதலன் கைதாகியுள்ளார்.

தலைமறைவான 24 வயதான வாகன சாரதியை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

## உர கொள்வனவுக்கான வவுச்சர் விநியோகம்!

கொழும்பு, மே 05

சிறுபோக நெல் செய்கைக்கு பசளை கொள்வனவுக்கான வவுச்சர்களை விநியோகிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த யோசனைக்கு நிதிக் குழுவின் அங்கீகாரமும் கிடைத்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

உர இறக்குமதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் விவசாய அமைச்சில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே விவசாய அமைச்சர் இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தினார். (ஐ)

# விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 05

'திராவிட மாதிரியம் தமிழ்நாடும்' என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணியளவில் கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தொடக்க உரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலா சாலை விரிவுரையாளர் வே. சேந்தன் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம் பெறும்.

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
05.05.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகள் மக்களை பற்றி என்ன நினைக்கின்றனர்?

தையிட்டியில் விகாரை ஒன்றை நிர்மாணித்திருப்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து குறித்த இடத்தில் குழுமியிருக்கின்றனர். முதலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இது தொடர்பில் பொலிஸாருடன் முரண்பட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசு கட்சியினரும் தையிட்டிக்கு சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர். யுத்தம் முடிவுற்ற பின்னரான கடந்த 14 வருடங்களாக பௌத்த மயமாக்கல் ஒரு தொடர் அரசியல் பிரச்னையாகவே இருந்து வருகின்றது. ஒரு விகாரை நிர்மாணிக்கப்படுகின்றது என்றால் அவ்வாறான ஆக்கிரமிப்பு வடிவங்கள் தொடரப் போகின்றன என்பதே அதன் பொருளாகும்.

தமிழ்த் தேசிய அரசியல் எழுச்சி வேர்கொண்ட காலத்திலிருந்து அதனைத் தோற்கடிப்பதற்கான இராணுவ வழிமுறையை விஸ்தரித்துவந்த சிங்கள ஆட்சியாளர்கள் மறுபுறம் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், விகாரைகளின் மூலம் சிங்கள மேலாதிக்கத்தை நிரந்தரமாக்குவதற்கான திட்டங்கள் கிழக்கில் முஸ்லிம்களை கைக்குள் போட்டுக்கொள்ளுதல் - எனப் பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்து வந்திருக்கின்றனர்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன ஒருமுறை சிங்களவர்களை நோக்கிக் கூறியிருந்தார் - அதாவது, நீங்கள் எல்லைகளை நோக்கி செல்லாவிட்டால் எல்லைகள் உங்களை நோக்கிவரும். இது அடிப்படையில் ஆட்சியாளர்களுக்கான மாகியவல்லியின் ஆலோசனை. அதாவது, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவ முகாம்களை நிர்மாணிப்பதல்ல முக்கியம் - இராணுவத்துக்கு விசுவாசமான குடிகளை உருவாக்க வேண்டும். இதன் மூலம் மாகியவல்லி கூறும் ஆலோசனை என்ன? அரசியல் சூழ்நிலைகள் மாறுகின்றபோது, இராணுவ முகாம்களை அகற்ற நேரிடும் - ஆனால், அவ்வாறான சூழலில் இராணுவத்துக்கு விசுவாசமான குடிகள் அப்படியே இருப்பர்.

உண்மையில், அவர்கள்தான் உண்மையான இராணுவமாவர். இந்த ஆக்கிரமிப்பு தத்துவத்தின் அடிப்படையில்தான் சிங்கள ஆட்சியாளர்கள் ஒவ்வொரு நகர்வுகளையும் முன்னெடுத்து வந்திருக்கின்றனர். இந்த ஆக்கிரமிப்பு தத்துவத்தின் அடிப்படையில்தான் இராணுவ முகாம்கள் இருக்கின்ற ஒவ்வோர் இடங்களிலும் புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றன. தங்களின் வழிபாட்டுக்கென வைக்கப்படும் சிலைகள், பின்னர் சிறிய விகாரையாக மாறும் - அதன் பின்னர் பெரிய விகாரையாக மாறும். இதுதான் மாகியவல்லியின் அணுகுமுறை. இடதுசாரித்துவம், பாசிசம் பற்றியெல்லாம் வகுப்பெடுத்த முன்னாள் இயக்கங்களின் தலைவர்களுக்கு இந்த சிறிய உண்மைகூடவா புரியவில்லை?

இத்தனை வருட அனுபவங்களுக்கு பின்னரும் இதனை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளவில்லை என்றால், இவ்வாறானவர்கள் தொடர்ந்தும் அரசியல்வாதிகளாக இருப்பதில் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மையிருக்க முடியுமா? தையிட்டியில் பௌத்த விகாரையொன்று அமைப்பட்டதாக தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கூச்சலிடுகின்றனர். விகாரை நிர்மாணிக்கப்பட்டு கலசம் வைக்க முற்படும்போதுதான், இவர்கள் அந்த இடத்தில் கூடி சத்தமிடுகின்றனர்.

இந்த விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்டபோது அரசியல்வாதிகள் என்ன செய்து கொண்டிருந்தனர்? பின்னர் கட்டுமான வேலைகள் முன்னெடுக்கப்பட்டபோது, என்ன செய்தனர்? 2010ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமான வேலைகள் முடிவுற்று கலசம் வைக்கப்படும்போதுதான் நமது அரசியல்வாதிகளுக்கு ஆக்கிரமிப்பின் காரம் உறைத்திருக்கின்றது. ஒருவேளை விகாரைக்கு கலசம் வைப்பது சத்தமின்றி இடம்பெற்றிருந்தால் தையிட்டி விகாரை விவகாரம் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் நினைவிலேயே இருந்திருக்காதுபோலும். இவர்களின் அரசியல் பொறுப்புணர்வை என்னவென்பது?


சிங்கள ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்காக ஜனநாயக வழியில் போராடுவதில் தவறில்லை. போராடுவதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவென்றால் அதனை அரசியல்வாதிகள் கையிலெடுப்பதில் தவறில்லை. ஆனால், விகாரை கட்டுவதை அனுமதித்துக்கொண்டு - விகாரை கட்டும்வரையில் அமைதியாக இருந்துவிட்டு - அதற்கு எதிராக குரலெழுப்புவதானது அடிப்படையில் சிங்கள ஆட்சியாளர்களின் திட்டங்களுக்கு மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஒப்பானதாகும். அத்துடன், வாக்களித்த மக்களை முட்டாளாக்கும் செயலுமாகும். மக்களை முட்டாளாக்க எண்ணினால் ஒருநாள் மக்கள் அனைத்து அரசியல்வாதிகளுக்கும் நல்ல பாடமொன்றை புகட்டக்கூடும்.

# யாழ் நூல் தந்த விபுலாநந்தர்...!

வி. ரி. சகாதேவராஜா

*விபுலாநந்தர் சுவாமிகளின் 99ஆவது துறவற நாள் இன்றாகும். இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.*

இன்று வெள்ளிக்கிழமை சித்ரா பௌர்ணமி தினம். இத்தகைய தினத்தில்தான் உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் துறவறம் பூண்டார். தனது 30ஆவது வயதில் அதாவது 1924 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமியில் துறவறம் பூண்ட சுவாமிகளின் துறவறத்துக்கு இன்று 99 வயதாகிறது.



சுவாமி விபுலாநந்தர் (மார்ச் 27, 1892 - ஜூலை 19, 1947) பிறந்து சுமார் 131 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. சுவாமி விபுலாநந்தரின் கல்விப் பணிகளும் அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகளும், அவர் உருவாக்கிய தாபனங்களும் காலத்தால் மறையாது. இலங்கையில் தமிழ்த் திறனாய்வுத்துறை வளர்ச்சி பெறுவதற்கு முதல்படியை அமைத்துக் கொடுத்தவர் சுவாமி விபுலாநந்தரே என்றால் அது மிகையாகாது. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இருக்கும் வரை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் திருநாமமும் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமையாளரும், திருப்புகழுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

இயல்பாகவே இறை நாட்டம் கொண்டிருந்த மயில்வாகனன் ‘சிறீ இராமகிருஷ்ண மிஷன்’, சமயத்துக்காக ஆற்றி வரும் பணிகளை அறிந்து, தம்மையும் அந்த அமைப்புடன் ஈடுபடுத்திக் கொள்ளலாமென எண்ணியிருந்த வேளையில், யாழ்ப்பாணத்துக்கு 1917ஆம் ஆண்டில் சுவாமி சர்வானந்தர் வருகை புரிந்தார். சர்வானந்தரின் தொடர்பு மயில்வாகனனின் உள்ளத்துள் ‘திறவுத் தூய்மை’ எனும் திருவிளக்கை ஏற்றி வைத்தது.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக ‘யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்’ என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கலானார். இந்தச் சங்கத்தின் மூலம் பிரவேசப் பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மயில்வாகனனாரின் இந்த முயற்சி எத்தனையோ பண்டிதமணிகளை ஈழநாட்டுக்கு அளித்துள்ளது.

மனத்தை ஈர்ந்து வந்த துறவுணர்வு, நாளும் பொழுதும் பெருகி, ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனில் சங்கமிக்கத் துடித்துக் கொண்டிருந்தார். ஆசிரிய பதவியை துறந்து 1922ஆம் ஆண்டில் சிறீ இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார் மயில்வாகனன். சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சிவானந்தரினால் பிரபோத சைத்தன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும், சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன.

இரண்டு வருடங்கள் அங்கு பயின்ற அவர், இராமகிருஷ்ண மிஷன் நடத்திய ‘இராமகிருஷ்ண விஜயம்’ என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கும்,

வேதாந்த கேசரி (Vedanta Kesari) என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராக விருந்து பல அரிய கட்டுரைகளை எழுதினார்.

1924 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் “சுவாமி விபுலாநந்தர்’ என்ற துறவறப் பெயர் வழங்கப்பட்டது. அதன் பின்னர், அவர் இலங்கை திரும்பி, இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.


செட்டி நாட்டாரசர் வேண்டுகோளின் படி, சுவாமி விபுலாநந்தர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1931ஆம் ஆண்டு தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்று, பல்கலைக்கழக வரலாற்றில் என்றென்றும் நினைத்து போற்றக்கூடிய தம் தமிழ்த் தொண்டை பதிவு செய்தார். அக்காலப் பகுதியில் தான் அவருடைய இசை சம்பந்தமான ஆராய்ச்சி ஆரம்பமாகியது.

இராமகிருஷ்ண மிஷன் இமயமலைப் பகுதியில் உள்ள அல்மோரா (யுடஅழசயா) என்ற இடத்தில் மாயாவதி ஆசிரமத்தில் இருந்து வெளியிடும் ‘பிரபுத்த பாரத (Prabuddha Bharatha)’ என்ற சஞ்சிகையின் ஆசிரியராக 1934ஆம் ஆண்டில் விபுலாநந்த அடிகள் நியமிக்கப்பட்டார். அங்குதான், இசைத் தமிழ் பற்றிய முழுமையான ஆய்வு செய்யப் பெற்று, அரிய நூலாகிய ‘யாழ் நூல்’ உருவாக்கம் பெற்றது.

1945ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளுக்கு இணங்க பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத்துறை எவ்வழியில் செல்லவேண்டும் என்ற திட்டங்களை சுவாமி விபுலாநந்தரே வகுத்தார் என்பது நினைவில் இருக்கத்தக்கது. அவரைத் தொடர்ந்தே பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் செல்வநாயகம், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சதாசிவம் போன்ற அறிஞர்கள் தமிழ்த் துறையை விருத்தி செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் நூல் அரங்கேற்றத்துக்கு பின்னர் பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். கொழும்பில் மருத்துவ விடுதி ஒன்றில் தங்கி சிகிச்சை பெறலானார். 1947ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு சுவாமி விபுலாநந்தர் அமரத்துவம் அடைந்தார். சுவாமியின் பூதவுடல், சுவாமி அவர்கள் கண்ணும் கருத்துமாக உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. அவரின் கல்லறையில் அவர் யாத்த “வெள்ளைநிற மல்லிகையோ...?”, என்ற கவிதை எழுதப்பட்டுள்ளது.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மே - 05 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - சித்திரை 22**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | பவுர்ணமி |




**மேடம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். சகஊழியர்கள் மதிப்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். புது யுக்திகளை கையாளுவீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துகொள்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ஒத்துழைப்பால் உங்களுக்கு திருப்தி உண்டாகும். உங்களின் உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள்.புது வாகனம் வாங்குவீர்கள். வரவு உயரும். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களை நம்பி எதை யும் ஒப்படைக்காதீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் விவாதம் வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். அதிக உழைக்க வேண்டிய நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவது நல்லது. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**மகரம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். வியாபாரத்தில் சூட்சமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. பணியாட்களால் உங்களுக்கு மனஉளைச்சல் ஏற்படும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டியநாள்.

# தமிழகத்தின் திராவிட மொடல் இந்தியாவுக்கான ஆட்சி முறை!

## முதலமைச்சர் ஸ்டாலின்

சென்னை, மே 05

“தமிழகத்தின் திராவிட மொடலே இனி இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்குமான ஆட்சி நிர்வாக முறைமை என்பது உறுதியாகியிருக்கிறது” என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

தி. மு. க. ஆட்சியின் இரண்டு ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு தி. மு. க. தொண்டர்களுக்கு அந்தக் கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு. க. ஸ்டாலின் எழுதி உள்ள கடிதத்தில்,

“10 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழக மக்கள் தி. மு. கவுக்கு ஆதரவு தந்தார்கள். ஜனநாயகத்தின் எஜமானர்களான மக்கள் அளித்த தீர்ப்பை மதித்து, அவர்களின் நம்பிக்கை வீண்போகாத வகையில், ஆட்சியைப் பொறுப்பேற்ற 2021 மே 7ஆம் நாள் முதல் ஒவ்வொரு திட்டத்தையும் மக்கள் நலனை மனதில் கொண்டு நிறைவேற்றி வருகிறது நமது திராவிட மொடல் அரசு.

மக்களுக்கான திட்டங்களை மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்த வேண்டியது அரசின் கடமை. அந்தத் திட்டங்களின் பலன்களை மக்கள் உணரும்படி எடுத்துரைக்க வேண்டியது கழக உடன்பிறப்புகளின் கடமை. தி. மு. க. தொடங்கப்பட்ட நாளிலிருந்து காலம் காலமாக அதன் மீது அவதூறுகளைப் பரப்புவதையே வாடிக்கையாக கொண்டிருப்போர் இருக்கிறார்கள். தி. மு. கவை திட்டியே வயிறு வளர்க்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். தி. மு. கவை விமர்சித்தால்தான் தங்களுக்கு அடையாளமும் முகவரியும் கிடைக்கும் என்று அவதூறு பரப்புவோர் இருக்கிறார்கள். இன்று, நேற்றா இதைப் பார்க்கிறோம்? என்றுதான் இந்த வீண் பழிகளை கண்டு நாம் அஞ்சியிருக்கிறோம்?

நம்மை நம்பி தமிழகத்தை ஒப்படைத்த மக்களுக்கு நாம் செய்திருக்கும் பணிகளை, நிறைவேற்றியிருக்கும் திட்டங்களை, இரண்டாண்டு காலத்தில் நிகழ்த்திய சாதனைகளை அவர்களிடம் எடுத்துரைத்து அவர்களின் இதயத்தில் அவற்றைப் பதியச் செய்திடும் கடமை, உடன்பிறப்புகளாம் உங்களுக்கும், உங்களில் ஒருவனான எனக்கும் இருக்கிறது. அதனால்தான், திராவிட மொடல் அரசின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கி மே 7, 8, 9 ஆகிய மூன்று நாட்களில் 1,222 இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன - என்று கூறிய முதல்வர் ஸ்டாலின் இதுவரைகாலத்தில் நிறைவேற்றிய வேலைத் திட்டங்களையும் குறிப்பிட்டிருந்தார்.

(ஐ)

# திராவிட மொடல் என்பது வெற்று அரசியல் கோஷம்!

## தமிழக ஆளுநர் ரவி

சென்னை, மே 05

திராவிட மொடல் ஆட்சி என்பது வெறும் அரசியல் கோஷம். காலாவதியான ஒரு கொள்கையை உயிர்ப்புடன் வைக்க மேற்கொள்ளப்படும் முயற்சி. திராவிட மொடல் என்பது ஒரே பாரதம் கொள்கைக்கு எதிரானது என்று தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசுக்கும், தமிழக ஆளுநர் ஆர். என். ரவிக்கும் பல்வேறு தருணங்களில் கருத்து மோதல்கள் ஏற்பட்டு வரும் சூழலில் தி. மு. க. அரசின் திராவிட மொடல் கொள்கையை கடுமையாக சாடியுள்ளார் ஆளுநர் ரவி.

திராவிட மொடல் ஆட்சி என்பது வெறும் அரசியல் கோஷம். காலாவதியான ஒரு கொள்கையை உயிர்ப்புடன் வைக்க மேற்கொள்ளப்படும் முயற்சி. திராவிட மொடல் என்பது நமது ஒரே பாரதம் கொள்கைக்கு எதிரானது. ஆனால், தனிப்பட்ட முறையில் எனக்கும் முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கும் இடையே நல்ல உறவு இருக்கிறது. ஸ்டாலின் ஒரு நல்ல மனிதர். அவர்மீது எனக்கு மரியாதை இருக்கிறது. அவரிடம் நானும் என்னிடம் அவரும் பரஸ்பரம் மரியாதையாகவே நடந்து கொள்கிறோம். தனிப்பட்ட முறையில் எங்களுக்குள் நல்ல உறவு இருக்கிறது.

ஆனால், ஆளுநர் தனது அதிகாரத்தை மீறி எல்லை தாண்டி செயல்படுகிறார் என்று தி. மு. க. அரசு முன்வைக்கும் குற்றச்சாட்டு பொய்யான குற்றச்சாட்டு. அது முழுக்க முழுக்க அபத்தமானது. ஆளுநருக்கு என்று ஒரேயோர் எல்லைதான் இருக்கிறது. அந்த எல்லை என்பது அரசியல் சாசனத்தால் வகுக்கப்பட்டது.

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு பிரச்னைகளை அறிந்தும் நான் எப்படி சட்டப்பேரவையில் தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்று கூற முடியும். நான் தமிழக மக்களுக்கு உண்மையை மட்டுமே உரைப்பேன் என்று உறுதிமொழி எடுத்திருக்கிறேன் அல்லவா? - என்றார்.

(ஐ)

# களைகளுக்கு கோடலிகள்மீது கோபம் வருவது இயற்கையே

## ஆளுநருக்கு வெங்கடேசன் பதில்

சென்னை, மே 05

“களைகளுக்கு கோடாலிகள் மீது கோபம் வருவது இயற்கை தான்” என்று ஆளுநருக்கு சு. வெங்கடேசன் பதில் அளித்துள்ளார்.


திராவிட மொடல் ஆட்சி என்பது வெறும் அரசியல் கோஷம். காலாவதியான ஒரு கொள்கையை உயிர்ப்புடன் வைக்க மேற்கொள்ளப்படும் முயற்சி. திராவிட மொடல் என்பது நமது ஒரே பாரதம் கொள்கைக்கு எதிரானது என்று தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்து இருந்தார். இதற்கு பதில் அளிக்கும் வகையில் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தனது ட்விட்டர் பக்கத்தில் கருத்து ஒன்றை பதிவு செய்துள்ளார்.

அதில், “திராவிட மொடல் செத்துப் போன தத்துவம்.” “மார்க்சியம் இந்தியாவை சிதைத்து விட்டது.” “ பரிணாமக் கோட்பாடு மேற்கத்திய அடிமைத்தனம்” என்று சொல்லும் ஆளுநர் அவர்களே! களைகளுக்கு கோடாலிகள் மீது கோபம் வருவது இயற்கை தான் என்பதை நாங்கள் அறிவோம். உங்கள் கோபத்தை ரசிக்கிறோம்.” என்று தெரிவித்துள்ளார்.

(ஐ)

# மீண்டும் இணையத் தூது; பழனிசாமி கூறுவது பொய்!

## பன்னீர்செல்வம்



மதுரை, மே 05

பழனிச்சாமி தினந்தோறும் பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொண்டு இருக்கிறார். அ. தி. மு. க. தொண்டர்கள் எங்கள் பக்கம்தான் இருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார் ஓ. பன்னீர்செல்வம்.

மதுரையில் முன்னாள் முதல் அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது செய்தியாளர் ஒருவர், நீங்கள் மீண்டும் அ. தி. மு. கவில் இணைவதற்கு தூது விடுத்து உள்ளதாக பழனிசாமி கூறியமை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பன்னீர்செல்வம்,

பழனிச்சாமி தினந்தோறும் பொய் மூட்டைகளை அவிழ்த்துக்கொண்டு இருக்கிறார். அ. தி. மு. க. தொண்டர்கள் எங்கள் பக்கம்தான் இருக்கிறார்கள் என்பது திருச்சி மாநாட்டில் நிரூபனமாகி உள்ளது. அடுத்த மாநாடு விரைவில் நடைபெறும் - என்றார்.

# ராஜிதவுக்கு கட்சிக்குள் வலுக்கின்றது எதிர்ப்பு!

## அவரை வெளியேற்றுமாறு கடும் அழுத்தம்

கொழும்பு, மே. 05

**“அரசுடன் இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் இருக்கும் ராஜித சேனாரத்னவைத் தொடர்ந்தும் கட்சிக்குள் வைத்திருந்தால் கட்சிக்கு ஆபத்து. அவரை உடனே நீக்கவேண்டும்.”**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் கட்சியின் முக்கியஸ்தர்கள்.**

ஐக்கிய மக்கள் சக்தி தேசிய அரசுடன் இணைய வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கூறி வருகின்ற ராஜித சேனாரத்ன அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி இதே கருத்தைப் பகிரங்கமாகக் கூறினார். இதனைத் தொடர்ந்து கட்சிக்குள் ராஜிதவுக்கு எதிர்ப்புக்கள் கிளம்பின.

“ராஜித விரும்பினால் அரசுடன் இணையட்டும். ஆனால், கட்சிக்குள் இருந்துகொண்டு கட்சி அலுவலகத்தைப் பயன்படுத்தி இவ்வாறான கருத்துக்களை அவர் வெளியிடக்கூடாது” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் விசனம் தெரிவித்தனர்.

ராஜிதவைக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கட்சியின் முக்கியஸ்தர்கள் - உறுப்பினர்கள் எனப் பலரும் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வலியுறுத்தினர்.

அதையடுத்து ராஜிதவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளுமாறு கட்சி செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாசீம், திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் லக்ஸ்மன் கிரியெல்ல உள்ளிட்ட ஒழுக்காற்றுக் குழுவிடம் பொறுப்பை ஒப்படைத்தார் சஜித்.

ரஞ்சித் மத்தும பண்டாரவின் வீட்டில் விசாரணை ஏற்பாடு செய்யப்பட்டது. விசாரணைக்கான அழைப்பை விடுத்ததும் அழைப்பை ஏற்று உடனே ஆஜராகி தனது விளக்கத்தை வழங்கினார் ராஜித.

அந்த விளக்கம் எவ்வாறு இருப்பினும், அரசுடன் இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் இருக்கும் அவரைத் தொடர்ந்தும் கட்சிக்குள் வைத்திருந்தால் கட்சிக்கு ஆபத்து என்றும், அவரை உடனே நீக்க வேண்டும் என்றும் கட்சிக்குள் இருந்து தொடர்ந்தும் தலைவர் சஜித்துக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது என அறியமுடிகின்றது.

(அ)

# கைதிகளை உறவுகள் சந்திப்பதற்கு வாய்ப்பு

கொழும்பு, மே. 05

வெசாக் போயா தினத்தை முன்னிட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை உறவினர்கள் சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும் இந்த வாய்ப்பு வழங்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கைதிகளின் உறவினர்களின் மூலம் அவர்களின் வீடுகளில் இருந்து கொண்டு செல்லப்படும் உணவுப்பொதி மற்றும் இனிப்புப் பண்டங்களை ஒருவருக்கு போதுமான அளவில் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் சட்ட திட்டங்களுக்கு அமைய உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உறவினர்களைப் பார்வையிடும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 25 பேர் கைது!

திருமலை, மே. 05

திருகோணமலையில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் 5 டிங்கி படகுகளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

18 முதல் 57 வயதுக்கு இடைப்பட்ட குறித்த மீனவர்கள் துறைமுகம், கிண்ணியா, மூதூர் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை மாவட்ட பிராந்திய கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

(அ)

# மாகாண சபை தேர்தலை உடன் நடத்துமாறு ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு, மே. 05

முதலில் உள்ளூராட்சித் தேர்தலன்றி மாகாண சபைத் தேர்தலையே நடத்த வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியின் ஒன்றிணைந்த ஊடக சந்திப்புஎதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே ரவூப் ஹக்கீம் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தற்போது நாட்டின் தேர்தல் வரைபடம் மாற்றப்பட்டுள்ளது. எல்லை நிர்ணய ஆணைக் குழுவைப் பயன்படுத்தி தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றன. அதனால் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் குறைக்கப்படும் அபாயமுள்ளது. அது தொடர்பில் நாம் மிகவும் உன்னிப்பாக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலையன்றி மாகாண சபைத் தேர்தலை நாம் கோருகிறோம். பழைய தேர்தல் முறையில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.

(அ)

# வடக்கு மாகாண ஆளுநரின் உத்தரவை உதாசீனம் செய்த வவுனியா அரச அதிபர்

வவுனியா, மே. 05

வடக்கு மாகாண ஆளுனர் ஜீவன் தியாகராஜாவின் உத்தரவை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர உதாசீனம் செய்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த கூட்டத்துக்கு வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

கூட்டம் முடிந்த பின் 4.30 மணிக்கு ஊடக சந்திப்பு நடைபெறும் என மேலதிக மாவட்ட அரச அதிபர் தி.திரேஸ்குமாரால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மாலை 4 மணியில் இருந்து மாலை 6 மணி வரை மண்டப வாயிலில் காத்திருந்த ஊடகவியலாளர்கள், கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இடைநடுவில் வெளியேறிய வடக்கு மாகாண ஆளுனர் ஜீவன் தியாகராஜாவிடம், ஊடக சுதந்திர நாளான இன்று(நேற்று முன்தினம்) எம்மை ஏன் மாவட்ட செயலக ஒருங்கிணைப்புக் கூட்டத்துக்கு அனுமதிக்கவில்லை என கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த ஆளுநர், நீங்கள் கூட்ட மண்டபத்துக்குள் வரவில்லையா? உங்களை அனுமதிக்கவில்லை என எனக்கு தெரியாது. மன்னித்துக் கொள்ளுங்கள்.-என்றார்.

யார் வர வேண்டாம் எனக் கூறியது என ஊடகவியலாளரிடம் கேள்வி எழுப்பிய அவர், நீங்கள் மண்டபத்துக்குச் செல்லுங்கள். நான் சொன்னதாக அரச அதிபரிடம் சொல்லுங்கள் எனக் கூறி அங்கு நின்ற இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானிடமும், பிரதிநிதிகளிடமும், அரச அதிபரிடமும் இதனைத் தெரியப்படுத்துமாறு கூறிவிட்டுச் சென்றிருந்தார்.

இராஜாங்க அமைச்சரின் பிரதிநிதிகள் குறித்த விடயத்தை அரச அதிபரிடம் தெரியப்படுத்தியும், ஆளுநரின் உத்தரவை கருத்தில் எடுக்காது கதவுகளை மூடி ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

(அ)

# ஹிங்குராங்கொடையில் அமையும் சர்வதேச சிவில் விமான நிலையம்!

கொழும்பு, மே. 05

ஹிங்குராங்கொடை விமான நிலையத்தை சர்வதேச சிவில் விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இதனுடாக பொலன்னறுவை, சிகிரியா, அனுராதபுரம், தம்புள்ளை உள்ளிட்ட இடங்களை பார்வையிட வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை கவர முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அத்துடன், சுற்றுலாப் பயணிகள் ஈர்க்கப்படுவதனூடாக பாரிய அளவிலான அந்நிய செலாவணியை ஈட்ட முடியும் எனவும் அவர் கூறினார்.

ஹிங்குராங்கொடை விமான நிலையத்தில் குறைந்த பட்சம் யு330 ரக விமானத்தை தரையிறக்குவதற்கு மற்றும் பறக்கச்செய்வதற்கு தேவையான சில பிரதான அபிவிருத்திப் பணிகள் விரைவாக செய்யப்படவேண்டும் என விமான சேவைகள் அமைச்சர் கூறினார்.

தற்போது 2287 மீற்றர் நீளமாக காணப்படும் விமான ஓடுபாதையை 2 ஆயிரத்து 800 மீற்றர் வரை நீடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (அ)

# தென் மாகாணத்தில் எலி காய்ச்சல் தீவிரம்!

## 229 பேர் பாதிப்ப் 19 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே. 05

தென் மாகாணத்தில் தீவிரமாக எலிக்காய்ச்சல் தொற்று பரவி வருகின்றது. குறிப்பாக காலி மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் 229 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளனர்.

இவர்களுள் 19 பேர் உயிரிழந்துள்ளதாகவும் காலி மாவட்ட சமூக வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி தெரிவித்தார்.

அசுத்தமான நீர், ஈரமான மண் அல்லது சேற்றில் தொழில் செய்பவர்களுக்கே இந்த நோய் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மாத்தறை மாவட்டத்திலும் இந்நோய் பரவும் அபாயம் உள்ளது.

விவசாயிகளுக்கு மாத்திரமின்றி கட்டுமானப் பணிகளில் ஈடுபடுபவர்கள், சுத்திகரிப்பு தொழிலாளர்கள், கறுவா, தேயிலை பயிர்ச் செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் போன்றோரும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான காய்ச்சல், உடல் வலி, தசை வலி, கண் சிவத்தல் போன்றன இந் நோயின் அடையாளங்களாகும். இருப்பினும் ஏனைய அறிகுறிகள் இன்றி காய்ச்சல் மட்டும் இருந்தாலும் எலிக்காய்ச்சல் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. இந்நோயினால் பாதுகாப்பு பெற மருத்துவர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் மருந்துகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(அ)

# சூழ்ச்சிகளால் ஆட்சிமாற்றத்தை ஒருபோதும் ஏற்படுத்தமாட்டோம்!

## பொதுஜன பெரமுன கட்சி எம். பி.

*கொழும்பு, மே 05*

அரசியல் சூழ்ச்சிகளால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த போவதில்லை. தேர்தல் ஊடாகவே ஆட்சியமைப்போம். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண ஜனாதிபதி, அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன பணிமனையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மக்களாணை உண்டு என்பதை மே தின கூட்டத்தில் உறுதிப்படுத்தினோம். கட்சி என்ற ரீதியில் பலமாக உள்ளோம். எதிர்வரும் நாட்களில் கட்சியின் புதிய தவிசாளர் தலைமையில் முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்படும்.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தலைமையில் கட்சி மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்த போவதாக எதிர்க்கட்சி யினர் குறிப்பிடுகிறார்கள். பிரதமர் தினேஷ் குணவர்த்தன பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர். கட்சியின் பெரும்பான்மை ஆதரவு, பாராளுமன்ற நெறிமுறைகள் ஆகியவற்றுக்கு அமைய பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அரசியல் சூழ்ச்சிகளால் பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தி - ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண் டிய தேவை ஏதும் கிடையாது. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சிறந்த முறையில் செயல்படுகிறார்கள். பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (அ)




# தேசிய அரசு தொடர்பில் ரணில் பேசவே இல்லை!

## மறுக்கிறார் சாகல ரத்நாயக்க

*கொழும்பு, மே. 05*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசு பற்றிப் பேசவே இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய அரசு உருவாக்கம் பற்றி இப்போது பேசப்படுகின்றது. ஓரிரு நாட்களுக்கு முன் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திலும் இது பற்றிப் பேசப்பட்டது. அதில் கலந்துகொண்ட பலர் இது தொடர்பில் கேள்வி எழுப்பினர்.

”நாங்கள் அறிந்த வகையில் ஜனாதிபதி தேசிய அரசு பற்றிப் பேசவே இல்லை” என்று பதிலளித்தார் ஐ.தே.கவின் முக்கியஸ்தர் சாகல ரத்நாயக்க.

”தேசிய அரசு பற்றிப் பேசியது எதிர்க்கட்சியினர்தான். அவர்களே அது பற்றிப் பேசிவிட்டு இப்போது அரசுடன் இணையப்போவதில்லை என்று சொல்கின்றார்கள். அவர்களுக்குத்தான் தேசிய அரசு தேவை” என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஐ.தே.கவின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ”முழு பாராளுமன்றமும் அரசாகச் செயற்படுகின்றது” - என்றார். (அ)

# வெசாக் விடுமுறையை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகள்

*கொழும்பு, மே. 05*

வெசாக் போயா விடுமுறையை முன்னிட்டு, விசேட போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்று மற்றும் எதிர்வரும் 07ஆம் திகதி ஆகிய தினங்களில் விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ரயில்வே பிரதிப் பொதுமுகாமையாளர் இதிபொலகே தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முதல் விசேட பஸ் சேவைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வெளி மாகாணங்களுக்கும் வெளி மாகாணங்களில் இருந்து கொழும்புக்கும் இந்த பஸ் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிராண்டா தெரிவித்தார். (அ)

# ஆளுங்கட்சி கூட்டத்தில் குரங்குகளால் சலசலப்பு

*கொழும்பு, மே. 05*

ஆளுங்கட்சி பாராளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது சமகால அரசியல் நிலைவரங்களுக்கு அப்பால் ‘குரங்கு விவகாரம்’ பற்றியும் பேசப்பட்டுள்ளது.

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே ‘குரங்கு விவகாரம்’ குறித்து கேள்வியை ஆரம்பித்துள்ளார்.

“இந்த குரங்கு தொல்லை தாங்க முடியவில்லை, எனது தொகுதியிலும் நிலைமை மோசம். ஆக அவற்றை சீனாவுக்கு அனுப்பும் முடிவை நிறுத்தவே கூடாது. இது விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்று”வினா எழுப்பினார் அந்த எம்.பி.

‘குரங்குகளுக்கு இன்னும் விஸா’ கிடைக்கவில்லை என இதற்கு சிரித்தப்படியே பதிலளித்தார் ஜனாதிபதி.

இதன்போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசங்க, “ குரங்குகளை சீனாவுக்கு அனுப்பக்கூடாது. குரங்கு மூளையை அவர்கள் உண்கின்றனராம். நானும் எனது வீட்டில் 20 வருடங்களாக குரங்கு வளர்த்தவன். அதனால் அவ்வளவு பாதிப்பில்லை.” என்றார்.

அவரின் இந்த கருத்தையடுத்து கூட்டத்தில் சிரிப்பொலி மேலோங்கியது. “அப்படியானால் குரங்குகளை கொண்டுவந்து உங்கள் வீட்டில் விடலாம், அதுமட்டுமல்ல உங்களுக்கு குரங்கு துறை அமைச்சையும் வழங்கலாம் போலும்” என ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

“இது சிரிப்பதற்குரிய விடயம் அல்ல, குரங்கு பிரச்னை பெரும் பிரச்னைதான். இரண்டு சீன நிறுவனங்கள் என்னுடனும் பேச்சு நடத்தின. அவை இறைச்சிக்காக அல்ல, மிருகக்காட்சி சாலைக்கே கொண்டுசெல்லப்படுகின்றன. இதற்கு அனுமதி வழங்க வேண்டும்.” என கூறினார் மஹிந்தானந்த அளுத்கமகே.

# மொட்டுவில் பஸிலுக்கு எந்தப் பதவியும் இல்லை!

## சாகர காரியவசம் எம்.பி. தகவல்

கொழும்பு, மே. 05

**சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் பஸில் ராஜ பக்ஷவுக்கு எந்தப் பதவியும் இல்லை என்று பரபரப் புத் தகவலை வெளியிட்டுள்ளார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மொட்டுக் கட்சியில் பஸிலுக்கு எந்தப் பதவியும் இல்லை. அவர் கட்சியின் ஸ்தாபகர் மட்டுமே. அவரை மொட்டுவின் தேசிய அமைப்பாளர் என்று ஊடகங்கள் கூறினாலும் அப்படியொரு பதவி அவருக்கு வழங்கப்படவில்லை.

எமது கட்சி ஒருபோதும் உத்தியோகபூர்வமாக அவர் கட்சியின் தேசிய அமைப்பாளர் என்று அறிவித்ததில்லை. அவரை நாங்கள் கட்சியின் ஸ்தாபகர் என்றே அறிமுகப் படுத்தி வருகின்றோம் - என்றார். (அ)



# இராணுவ அதிகாரியெனக் கூறி மாணவர்களிடம் பணம் பறிப்பு!

கொழும்பு, மே. 05

கண்டி பிரதான தபால் நிலையத்துக்கு அருகில் பாடசாலை மாணவர்களை மிரட்டி பணம் பறிக்க முற்பட்ட 24 வயதுடைய இளைஞர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தம்மிடம் சந்தேகநபர் பணம் பறிக்க முற்பட்டமை தொடர்பாக சுற்றுலா காவல் துறையிடம் மாணவர்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேகநபரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவர்களிடம் தானொரு இராணுவ அதிகாரியென சந்தேகநபர் கூறியதுடன், அவர்களை மிரட்டி இந்தச் சந்தேகநபர் பணம் பறிக்க முற்பட்டமை தெரியவந்துள்ளது.

சனி, ஞாயிறு தினங்களில் மேலதிக வகுப்புக்கு வரும் பாடசாலை மாணவர்களைச் சந்தேகநபர் மிரட்டி ஏற்கெனவே பணம் பறித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு திருடிய பணத்தைச் சந்தேகநபர் போதைப் பொருள் பாவனைக்குச் செலவிட்டு வந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)



# ஊடகப் பிரதானிகளுடன் எதிர்க்கட்சியினர் சந்திப்பு

கொழும்பு, மே 05

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்களுடன் பிரதிநிதிகளின் சந்திப்பு நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்றது.

அரசாங்கத்தால் அமுல்படுத்தப்படும் ஜனநாயக விரோத செயல்பாடுகளுக்கு எதிராக பெரும் சக்தியாக ஒன்றிணைந்து செயல்படுவதற்கு பல எதிர்க்கட்சிகள் சமீபகாலமாக முன்முயற்சி எடுத்துள்ளதுடன், ஊடக நிறுவனங்களுடனான இந்த சந்திப்பு அந்த திட்டத்தின் இன்னொரு படியாக அமைந்தது.

இதன்போது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உலக ஊடக சுதந்திரத்தை கொண்டாடும் இன்றைய தினத்தில் (நேற்று முன் தினம்) எதிர்க்கட்சிகள் ஊடக நிறுவனங்களுடன் இணைந்து பொருளாதார அரசியல் உரையாடலை ஆரம்பித்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

ஜனநாயகத்தின் 3ஆவது பிரதான தூண்களான நிறைவேற்று, சட்டவாக்கத்துறை, நீதித்துறை ஆகியவற்றுடன் 4ஆவது பிரதான தூணாக ஊடகங்களின் வகிபாகம் பாராட்டப்பட வேண்டியது என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

முற்போக்கான மற்றும் உரையாடல் கருத்துப் பரிமாற்றம் இன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், பல்வேறு அரசியல் கட்சிகள் தனித்துவமான கொள்கைகளை கொண்டிருந்தாலும், தேசிய ரீதியில் முக்கியமான பல விடயங்களில் எதிர்க்கட்சிகளாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

உதாரணமாக, ஊடகங்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தயாராகி வரும் ஒலிபரப்பு அதிகாரசபை சட்டம், அரசாங்கம் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றைச் சுட்டிக்காட்ட முடியும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அதனூடாக அடக்கப்படவுள்ள 220 இலட்சம் மக்களைப் பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சி என்ற வகையில் தமது குழுவும் ஊடகவியலாளர்களாகிய நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# சட்டவிரோத மணல் அகழ்வு பின்னணியில் பொலிஸார்!

## சிறீதரன் பகிரங்க குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மே. 05

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் என்பவற்றின் பின்னணியில் கிளிநொச்சி பொலிஸார் செயற்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றபோது கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பில் பிரதேச செயலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து இவ்வாறான மணல் அகழ்வுகளின் பின்னணியிலும் போதைப் பொருள் விவகாரத்தின் பின்னணியிலும் பொலிஸாரே செயற்பட்டு வருகின்றனர் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் பகிரங்கமாக சுட்டிக் காட்டினர்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறிப்பிடுகையில்-

மணல் மாபியாக்களின் முழு ஒத்துழைப்புடன் கிளிநொச்சியில் பொலிஸாரால் விளையாட்டுப் போட்டி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்பில் பொலிஸாருக்கு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் கடிதம் எழுதுகின்ற போது அந்த கடிதத்தினை மண் மாபியாக்களுக்கே காட்டியுள்ளனர்- என்றனர்.

இதேவேளை, மாவட்டத்தில் இடம்பெறுகின்ற அத்தனை சட்டவிரோத செயல்களின் பின்னணியிலும் பொலிஸாரே இருக்கின்றனர். அதே நேரம், மாவட்டத்தில் சேவையாற்றுகின்ற அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு பொலிஸாரின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் சுட்டிகாட்டினார்.

பிரதேச பொது அமைப்புகளும் பொலிஸாரின் துணையுடனே மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றது என்றும், எந்தவிதமான அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்படாத நிலையில் கிராமப்புறங்களில் குறிப்பாக கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஊரியான், கோரக் கண், கட்டுக்கல்லாறு தட்டு வன் கொட்டி ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பின்னணியில் பொலிஸாரே இருக்கின்றனர் என்றும், கூடுதலான பொலிஸ் அதிகாரிகளுக்கு சொந்தமான டிப்பர் வாகனங்களும் குறித்த மணல் அகழ்வுகளில் ஈடுபடுவதாகவும், பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கட்டாரில் வேலை தருவதாக கூறி ஆறு இலட்சம் ரூபா நிதி மோசடி

## யாழ்ப்பாணப் பெண்கள் மன்னாரில் கைது

மன்னார், மே. 05

கட்டாரில் வேலை வாங்கித் தருவதாக கூறி 6 லட்சம் ரூபா நிதி மோசடி செய்த இரண்டு பெண்கள் மன்னாரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த பெண்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்கள் 23 மற்றும் 42 வயதுடைய யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் மன்னார் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நாமலை ஜனாதிபதியாக்க கடவுளால்கூட முடியாது!

## கூறுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மே. 05

நாமல் ராஜபக்ஷவை இந்த நாட்டின் ஜனாதிபதியாக்க புனித கடவுளால் கூட முடியாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாமல் ராஜபக்ஷ புரொய்லர் கோழி என்றும் அவரது தந்தை மகிந்த ராஜபக்ஷ அரசியலின் கிராமத்து கோழி என்றும் கூறப்படுகின்றது.

ராஜபக்ஷ குடும்பத்தில் எவரும் இனிவரும் காலத்தில் நாட்டின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்படமாட்டார்கள். எனினும் அவர்கள் அரசியலில் ஏதாவது ஒரு மட்டத்தில் இருப்பார்கள்.

காலிமுகத்திடல் போராட்டத்தின்போதும் ஜனாதிபதியாக மகிந்த இருந்திருந்தால் அதனைச் சரியாக நிர்வகித்திருப்பார். பொருளாதாரம் இவ்வளவு பாரிய வீழ்ச்சியைச் சந்தித்திருக்காது - என்றார். (அ)



# போருக்கு பின்னான குடியேற்றங்களும் இனங்களுக்கு இடையிலான நல்லுறவும்

**எல். தேவஅதிரன்**

“எங்களுக்கு இங்கு தமிழர்களால் எந்தப் பிரச்னையும் இல்லை. 2013ஆம் ஆண்டு இங்கு குடியேறினோம். பொருளாதார பிரச்னைகளைத் தவிர இன ரீதியான பிரச்னைகளை நாங்கள் எதிர்கொண்டிருக்கவில்லை” என்கிறார் ரி. எம். இந்திராணி.

இந்திராணி போன்ற பெரும்பான்மை இனத்தவர்கள், 2013ஆம் ஆண்டு வவுனியாவின் எல்லைப் பிரதேசமான நெடுங்கேணி பிரதேசத்தில் அரசாங்கத்தால் குடியேற்றப்பட்டவர்கள்.

இலங்கையில் இன முரண்பாட்டு சிக்கல்கள் காரணமாக 1978களில் ஆரம்பித்த யுத்தம் 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் மௌனிக்க செய்யப்பட்டது. இதன் பின்னரான நல்லிணக்கம் மற்றும் நல்லுறவு எவ்வாறான நிலையில் இருக்கிறது என்பது ஆராய்வுக்குரியதே.

வடக்கு மாகாணத்தின் வவுனியா மாவட்டம் தமிழ், சிங்களம், முஸ்லிம் என மூவினங்களையும் சேர்ந்த மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்துவரும் பிரதேசமாகும். இங்கு தமிழ், முஸ்லிம்களுடன் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களும் வர்த்தகத்தில் ஈடுபடுகிறார்கள். ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டுவருகிறார்கள். அத்துடன், இவர்கள் அனைவரும் அரசியல் ரீதியான முரண்பாடுகள் காணப்பட்டாலும் நல்லிணக்கத்துடனேயே வாழ்ந்தும் வருகிறார்கள்.

இருந்தாலும் அண்மைய காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சிங்கள குடியேற்றங்கள் மூலமாக பிரச்னைகள் ஏற்பட்டு வருகின்றன என்றே கூற முடியும். இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிடும் தமிழர்கள் “எங்களது பிரதேசங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவதால் எங்களுடைய ஜனநாயக ரீதியான நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக பிரதேச சபை பிரதிநிதித்துவம் பிரச்னைக்குள்ளாகிறது. நீண்ட காலத்தில் மாகாண சபை, பாராளுமன்றம் வரை இது செல்லலாம” என்கின்றனர்.

இதே போன்று மகாவலி திட்டத்தின் கீழ் குடியேறி சில்லறை வியாபார கடையொன்றை நடத்திவரும், ஆர். எம். கருணாசிங்க,

“நாங்கள் இங்குவந்த காலத்தைப்போல் இப்போது பிரச்னைகள் குறைவு. எங்கள் கிராமத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தமிழ் சகோதரர்களும் இருக்கிறார்கள” என்கிறார்.

இலங்கையில் யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு, திட்டமிட்ட குடியேற்றங்களும் காரணமாக இருந்திருக்கின்றன. யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னரும் அவ்வாறான குடியேற்றங்கள் நிறுத்தப்படவில்லை. வடக்கு, கிழக்கு தமிழர்களின் பிரதேசங்களில் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றுகையில் பிரச்னைகள் தோற்றம் பெறுகின்றன.

தங்களது பூர்வீக நிலங்கள் பறிபோகின்றன. தமிழர்களின் விகிதாசாரம் குறைக்கப்படுகிறது என்ற வகையிலான குற்றச்சாட்டுக்கள் தமிழர் தரப்பிலிருந்து முன்வைக்கப்படுகின்றன.

“குடியேற்றப்படுபவர்கள் பயிர் செய்வதற்கு காடுகளை வெட்டி வேலை செய்து காணிகளை ஏற்படுத்துகிறார்கள். ஆனால், எங்கள் காணிகளை சரியான முறையில் சீர் செய்வதற்குக்கூட எங்களால் முடிவதில்லை.” என்று வவுனியாவைச் சேர்ந்த சிவகுரு சிவசெந்தில்நாதன் கூறுகிறார்.

யுத்த காலத்தில் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். 1990களில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டு வேறு மாவட்டங்களில் வசித்துவந்த முஸ்லிம் மக்கள் 2009இற்குப் பின்னர் மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருகின்றனர்.

‘அந்தக்காலத்திலிருந்து நாங்கள் நல்லுறவுடன்தான் வாழ்ந்து வருகிறோம். தமிழ் மக்களும் அன்புடன்தான் இருந்து வந்தார்கள். 1990ஆம் ஆண்டு நடைபெற்ற விடயம் எங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எங்களுக்கும் இடையிலானதல்ல. அது இயக்கங்களின் ஏதோ ஓர் அரசியல் ரீதியான பிரச்னை. 97இல் நாங்கள் வந்தவேளை அதனை அவர்கள் துரதிர்ஷ்டவசமானதாக தெரியப்படுத்தினார்கள். அதற்காக வருத்தமும் தெரிவித்தார்கள்’ என்கிறார் யாழ். நகரில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் எம். எம். தாஹிர்.

இதேவேளை, முஸ்லிம் மக்களது மீள் வருகை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என். சௌந்தரராஜன்

“ஒரு காலத்தில் முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் கசப்புணர்விருந்தது. உண்மை. ஆனால், தற்போதைய நிலையில் அவற்றையெல்லாம் மறந்து முஸ்லிம் மக்கள் சகோதரத்துவத்துடன் தமிழ் மக்களுடன் பழகுகிறார்கள். அவர்களுடன் எந்த விதமான வேறுபாடுகளும் எங்களுக்குள் கிடையாது. ஒரு காலத்தில் மட்டுமல்ல. எந்தக்காலத்திலும் அவர்கள் சகோதரத்துவத்துடன்தான் வாழ்கிறார்கள்”என்று கூறுகிறார்.

தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் என பல்லினம் கொண்ட நாட்டில் ஏற்பட்ட இன வன்முறை யுத்தமானது பல்வேறு மாற்றங்களையும், அழிவுகளையும் ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

புன்னைக்குடா, மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே 18 கிலோ மீற்றரிலுள்ள மீன்பிடிக் கிராமம். இங்கு 1979ஆம் ஆண்டில் மாத்தறை, காலி மாவட்டங்களை சேர்ந்த சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். 83களில் உருவான இன முறுகல் இவர்களை இடம்பெயர்ந்து மாத்தறை பிரதேசத்துக்கு செல்ல வைத்தது. 2009இற்குப் பின்னர் இவர்கள் இப்பிரதேசத்துக்கு வந்து மீண்டும் குடியேறியுள்ளனர். அடிப்படை வசதிகள் முழுமையாக இல்லாவிட்டாலும் அவற்றை சம்பந்தப்பட்டவர்களிடம்









கோரியபடியே சிறிய வியாபாரம், கடற்றொழில் போன்றவற்றில் ஈடுபட்ட வண்ணம் வாழ்ந்து வருகிறார்கள்.

தங்கள் வாழ்க்கை நிலை குறித்து புன்னைக்குடாவில் வதியும் சிங்கள இனத்தவரான 65 வயதுடைய டப்ள்யூ. எச். ரத்னபால,

‘எனக்கு 5 பிள்ளைகள், எங்களுக்கு ஒரு பிரச்னையும் இல்லாமல்தான் இருந்தோம். ஆமி உடுப்பு போட்ட ஆக்கள் வந்து சொன்னார்கள். எங்களுக்கு நீங்கள் இருக்கிறது பிரச்னை இல்லை. ஆனால், வேற யாரும் வந்து ஏதும் நடந்தால் எங்களுக்கு ஒண்டும் செய்ய ஏலாது என்று, அதன் பிறகுதான் நாங்கள் மாத்தறைக்கு போனம். அங்கு சென்று அகதி முகாம்களில் இருந்து பின்னர் வேறு இடங்களுக்குச் சென்ற சிறு வீடுகள் அமைத்துக் கொண்டு இருந்தோம். பிரபாகரன் சேர் இறந்ததன் பின்னர் 2010அளவில்தான் இங்கு வந்தோம்’ என்கிறார்.

இதேவேளை சிங்கள மக்களின் மீள் வருகை குறித்து 53 வயதுடைய தமிழரான செல்லத்துரை செல்வேஸ்வரன் கூறுகையில், ‘1984 வன்செயல் காலத்தில் இடம்பெயர்ந்து போய் இப்போது வந்திருக்கிறார்கள். சுனாமி அடித்தபிறகு 2005இல் அவர்கள் எங்களுக்கு விற்ற காணியிலேயே நாங்கள் இருக்கிறோம். 10 பேர்ச் ஒரு இலட்சம் ரூபாவுக்கு விற்று நாங்கள் வீடு கட்டியிருக்கிறோம். பிரச்னையொன்றும் அவர்கள் எங்களுக்குச் செய்யவில்லை. வந்தவர்கள் சிறிய சிறிய கொட்டில்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். மின்சாரம் இல்லை, வசதிகள் இல்லை. பனங்காட்டுக்குள் இருந்து சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்’ என்றார்.

நாட்டின் பல பகுதிகளிலும் பல்லினங்களும் இணைந்துவாழும் நிலை இருக்கிறது. சில பகுதிகளில் அவர்கள் தமக்குள்ளான புரிந்துணர்வுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ்கிறார்கள். தமிழர்- சிங்களவர்- முஸ்லிம்கள் என்று வேறுபாடு அவர்களுக்குள் இருப்பதில்லை. இது அவர்கள் ஒவ்வொருவரின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் மற்றவர்கள் அறிந்துகொள்ளவும், அவர்களிடைய திருமண பந்தங்களை ஏற்படுத்தவும் ஏதுவாக இருக்கிறது. எனினும், மேலும் சில பகுதிகளில் இன்றும் பிரச்னைகள் தொடர்ந்த வண்ணமுள்ளது.

1983களுக்குப் பின்னர் உருவான மோசமான சூழ்நிலை காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்கின்ற திருகோணமலை மாவட்ட தமிழ் கிராமமான தென்னமரவாடி என அழைக்கப்படுகின்ற விவசாயம், கடல் வளம் என நிறைய வளங்களுடன் கூடிய தென்னவன் மரபு வாடி முக்கியமானதாகும். 1984ஆம் ஆண்டு ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாக அப்பிரதேசத்தை விட்டு வெளியேறிய தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசித்து வந்திருந்தனர். 110 குடும்பங்கள் 2010ஆம் ஆண்டு மீளக் குடியேறினர். இப்போது 66 குடும்பங்களே வசிக்கின்றனர். காரணம் தொழில் மற்றும் கல்வி, மருத்துவ வசதிகளின்மையாகும். ஆனால், மீளக் குடியமர்ந்ததன் பின்னர் உருவாகியிருக்கின்ற சூழல் அவர்களை மீண்டும் அச்சத்துக்குள் தள்ளப்பட்டிருப்பதாக உணர்கின்றனர்.

இடம்பெயர்வதற்கு முன்னர் எமது ஊர் சிறப்பாகவே இருந்தது. மீளக் குடியேறிய பின்னர் இங்கு எல்லாம் காடுமண்டிக் காணப்படுகிறது. கல்வி தொழில் என எல்லாவற்றுக்கும் பிரச்சினை இருக்கிறது. எங்களுக்கு இங்கிருப்பதக்கு முடியாமலிருக்கிறது. அதற்குள் உருவாகும் சிங்களவர்கள், முஸ்லிம்களின் வருகையும் நெருக்கடியாகவே இருக்கிறது. சட்டரீதியாக குடியேற்றங்கள் நடைபெறவில்லையென்றாலும் அத்துமீறிய வருகைகள் காணப்படுகின்றன. வசதிகளும் இல்லை. தொழில் செய்யவும் முடியாத நிலையென்றால் என்ன செய்வது என்று கேள்வி எழுப்புகிறார் மூன்று பிள்ளைகளின் தாயான 56 வயதுடைய மகாலிங்கம் மங்களேஸ்வரி.

மீள்குடியேறலுக்குப் பின்னரான தமது கிராமத்தின் நிலை பற்றி கருத்துத் தெரிவித்த நாகராசா விதுர்சன் என்ற இளைஞன், ‘வடக்கையும் கிழக்கையும் பிரிப்பது பறையனாறு, இரண்டையும் இணைக்கும் தமிழ்க் கிராமம் இந்தத் தென்னமரவாடியே, இந்தக்கிராமத்தினை அழித்துவிட்டால் தமிழர்பகுதியின் இணைப்பு இல்லாமல் போகும். திருகோணமலை, அனுராதபுரம், முல்லைத்தீவு பிரதேசத்தை இணைக்கும் வீதி இன்னமும் புனரமைக்கப்படாது கிரவல் பாதையாகவே வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் ஒரு பெயர்ப்பலகைகூட போடப்படவில்லை. அதற்குக் காரணம் இந்த வீதியை புனரமைத்துவிட்டால் எமது கிராமத்தில் இங்கு மக்கள் தொகை கூடிவிடும் என்பதே’ என்கிறார்.

இது நல்லிணக்கதுடன் வாழும் மக்களை சில ஆட்சியாளர்கள் தமக்கான அரசியல் இலாபங்களுக்காகத் தூண்டிவிடும் ஒரு நிலையையே காட்டிநிற்கிறது. இதனால் தமிழ்- சிங்களம்- முஸ்லிம் என மூன்று இனங்களும் இணைந்துவாழும் சூழலை ஆபத்தான சூழலாக மாற்றுகின்ற திட்டமிடப்பட்ட செயல்பாடுகளாகும்.

தமது பிரதேசத்தில் கந்தசாமி மலை என்ற பெயரில் இருந்த மலையை தொல்லியல் திணைக்களத்தினர் ஆளுகைக்குட்படுத்தில ‘ரஜகம விகாரை’ என்று மாற்றியுள்ளதாகக் குறிப்பிடும் அவர், அதனை வைத்துக் கொண்டு சிங்களக் குடியேற்றங்களை கொண்டுவருவது அவர்களின் நோக்கம் என்றும் தெரிவிக்கிறார்.

‘சாதாரண சிங்கள மக்கள் இவ்வாறான காரியங்களைச்

(09ஆம் பக்கம் பார்க்க)

# மு.க.ஸ்டாலின் பதிலால் சர்ச்சை முடிவுக்கு வந்ததா?

## அமைச்சரவை மாற்றத்துக்கு ஆயத்தமாகும் அரசு

சிவகுமார் இராஜகுலம்



ஓடியோ லீக் சர்ச்சையால் தமிழ்நாடு நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜனின் பதவி பறிக்கப்படலாம் என்று பரவிய செய்திகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அளித்துள்ள பதில் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. ஓடியோ லீக் சர்ச்சை இத்துடன் ஓயுமா? மேலும் வீடியோக்கள் வரக் கூடுமா? திமுகவில் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தனித்து விடப்பட்டுள்ளாரா? அவருக்கு பா.ஜ.க. குறி வைக்கிறதா? என்பன போன்ற அடுக்கடுக்கான கேள்விகள் எழுந்துள்ளன.

இந்திய அரசியலில் பல வியங்களில் முன்னோடியாக திகழும் தமிழ்நாடு, இன்றைய நவீன டிஜிட்டல் யுகத்திற்கு ஏற்ப அரசியல் செய்வதிலும் ஈடுபடத் தொடங்கி வெகு நாட்களாகிவிட்டன. குறிப்பாக, பா.ஜ.க. மாநில தலைவராக அண்ணாமலை பொறுப்பேற்ற பிறகு ஓடியோ, வீடியோ கசிவு, என பல பெயர்களில் தனிப்பட்ட பதிவுகள் சமூக வலைதளங்கள் வாயிலாக பொதுவெளியில் பகிரங்கமாக வெளியிடப்பட்டன.

**ஓடியோ கசிவும், பி.டி.ஆர் விளக்கமும்**

அந்த வரிசையில், பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் பேசியதாக கூறப்படும் ஓடியோவின் முதல் பதிவு ஏப்ரல் 19ஆம் தேதி சமூக வலைதளங்களில் வெளியானது. அந்த ஓடியோவை தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்த பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை, அதனால் எழுந்த அதிர்வுகள் அடங்கும் முன்பே ஏப்ரல் 25ஆம் தேதி பிடிஆர் பேசுவதாகக் கூறி இரண்டாவது ஓடியோவை தாமே வெளியிட்டார்.

முதல் ஓடியோ பதிவில் "உதயநிதியும் (முதல்வரின் மகன்), சபரீசனும் (முதல்வரின் மருமகன்) கடந்த 60 ஆண்டுகளில் அவர்களின் தாத்தாக்கள் சம்பாதித்தை விட, இந்த ஒரு வருடத்தில் அதிகமாக சம்பாதித்து விட்டார்கள். ஏறத்தாழ 30 ஆயிரம் கோடி வரை சம்பாதித்துள்ளார்கள். இப்போது அதனை மறைக்க முடியாமல் பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளார்கள்," என்றும், இரண்டாவது ஓடியோ பதிவில், "ஒரு நபர் ஒரு பதவி என்ற கொள்கைக்கு நான் அரசியலுக்கு வந்த நாள் முதலே ஆதரவளித்து வருகிறேன். பா.ஜ.கவிடம் எனக்குப் பிடித்த விஷயம் இதுதான். கட்சியையும் மக்களையும் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு பிரிந்திருக்க வேண்டுமல்லவா? எல்லா முடிவுகளையும் அமைச்சர்களும் எம்.எல்.ஏக்களும்தான் எடுக்கின்றனர். நிதியை மேலாண்மை செய்வது சுலபம். இப்படி ஒரு அமைப்பு இருக்க முடியாது. **They are taking the bulk of the spoils.** முதல்வரின் மகனும் மருமகனும்தான் கட்சியே. அவர்களை நிதியளிக்கச் சொல்லுங்கள்" என்றும் பேசுவது பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன்தான் என்று கூறப்பட்டது. (இரு ஆடியோக்களின் உண்மைத்தன்மை சுயாதீனமான முறையில் உறுதிப்படுத்தப்படவில்லை.)

இந்த இரண்டு ஓடியோக்களிலுமே பொதுவான ஒரு அம்சம் இருந்தது. அவற்றில் எதிர் முனையில் இருப்பவர் யார் அல்லது பதிவு செய்தவர் யார் என்பதை, ஆடியோக்களை வெளியிட்டவர்கள் கூறவில்லை.

**பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் விளக்கம்**

ஓடியோ சர்ச்சைக்கு விளக்கமளித்த பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், "ஓடியோவில் உள்ள எந்த செய்தியையும் எந்தவொரு தனி நபரிடமோ, தொலைபேசி உரையாடலிலோ அல்லது தனிப்பட்ட உரையாடலிலோ நான் கூறவில்லை. நான் அரசியலுக்கு வந்தது முதல் எனக்கு நல்ல வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் துணையாகவும் இருக்கிறார் சபரீசன். எதிர்க்கட்சிகள் கூட உதயநிதி, சபரீசன் மீது குற்றச்சாட்டுக்கள் வைக்காத நிலையில், அவர்கள் மீது களங்கம் சுமத்த இது போன்ற ஜோடிக்கப்பட்ட ஓடியோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவர்களிடம் இருந்து என்னை பிரிப்பதன் மூலம் தங்கள் அரசியல் எண்ணங்களை நிறைவேற்றத் துடிக்கிறது ஒரு மிரட்டல் கும்பல்" என்று வீடியோ மூலம் பதிலளித்தார்.

சிறிய மௌனத்திற்குப் பிறகு ஏப்ரல் 26ஆம் தேதியன்று தி.மு.கவின் அதிகாரபூர்வ தொழில்நுட்ப அணியின் ட்விட்டர் பக்கத்தில் பி.டி.ஆருக்கு ஆதரவாக கருத்துகள் பதிவு செய்யப்பட்டன. அந்த ஒரு பதிவைத் தவிர தி.மு.க தரப்பிலிருந்து எதுவுமே சொல்லப்படவில்லை என்பதும் கட்சிக்குள் பி.டி.ஆர். மீது நிலவும் அதிருப்தியைக் காட்டுவதாகவே கருதப்பட்டது.

திமுகவின் சொத்துப்பட்டியல் என்று கூறி அண்ணாமலை வெளியிட்ட தகவலுக்காக அவர் மீது வழக்கு தொடரப் போவதாக அறிவித்த அக்கட்சி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் விஷயத்தில் கட்சி சார்பில் வழக்கு தொடுக்கப்படாது என்று தெளிவுபடுத்தியது. திமுக செய்தித் தொடர்புச் செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் இதுதொடர்பாக அளித்த பேட்டி வெளியானதுமே, கட்சிக்குள் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தனித்து விடப்பட்டிருப்பதாக ஊகங்கள் பரவின.

பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜனின் அமைச்சர் பதவி பறிக்கப்படலாம் அல்லது அவரிடம் இருந்து நிதித்துறை பறிக்கப்பட்டு வேறு இலாகா தரப்படலாம் என்று தமிழ்நாடு அரசியலில் பரபரப்பாக பேசப்பட்டது.

இந்த நிலையில்தான், "உங்களில் ஒருவன்' என்ற பெயரில் பொதுமக்களின் கேள்விகளுக்குப் பதிலளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலளிக்கும் 11.15 நிமிட வீடியோ செவ்வாய்க்கிழமை வெளியானது.

அதில், பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஓடியோ லீக் சர்ச்சை குறித்த கேள்விக்குப் பதிலளித்திருந்த அவர், 'இந்த ஓடியோ குறித்து அமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் ஏற்கனவே 2 முறை விளக்கம் அளித்துவிட்டார். இந்த மட்டமான ஓடியோ அரசியல் பற்றி நான் பேச விரும்பவில்லை. மக்களுக்கான பணிகளை செய்யவே எனக்கு நேரம் சரியாக இருக்கிறது. மட்டமான அரசியல் செய்யும் நபர்களுக்கு நான் விளம்பரம் தேடித்தர விரும்பவில்லை" என்று கூறியிருந்தார்.

**"முதலமைச்சர் பதிலால் முற்றுப்புள்ளி வரவில்லை"**

தமிழ்நாடு அமைச்சரவையில் ஒரு வாரத்திற்குள் மாற்றம் இருக்கும், அமைச்சர் பி.டி.ஆரின் பதவி பறிக்கப்படலாம் அல்லது இலாகா மாற்றப்படலாம் என்னும் வகையில் பரவிய செய்திகளுக்கு முற்றுப்புள்ளி விழுந்துள்ளதாகவே கருதப்படுகிறது. ஆனால், அது நிரந்தரமானதாக இருக்குமா என்று மூத்த பத்திரிகையாளர் குபேந்திரனிடம் பேசினோம்.

'முதலமைச்சரின் பதிலால் ஓடியோ லீக் விவகாரம் முடிவுக்கு வந்துவிட்டதாக நான் கருதவில்லை. ஏனெனில், இதுவரை வெளிவந்த 2 ஓடியோக்களுமே துண்டு துண்டாக வந்தவை. மேலும் ஓடியோக்கள் இருக்கிறதா என்று தெரியவில்லை.

அவற்றின் உண்மைத்தன்மை இன்னும் நிரூபிக்கப்படவில்லை. பி.டி.ஆரை மட்டுமின்றி ஒட்டுமொத்த திமுகவையும் குறிவைக்கும் பா.ஜ.க., திமுகவுக்கு எதிராக சிறு துரும்பு கிடைத்தாலும் விடாது எனும் போது பி.டி.ஆர். ஓடியோ விவகாரத்தில் அவர்கள் அவ்வளவு எளிதில் விட்டுவிட மாட்டார்கள்.

அடுத்தபடியாக, குறிப்பிட்ட சில திட்டங்கள், வேலைகளைக் குறிப்பிட்டு பி.டி.ஆர் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாக ஏதேனும் ஓடியோ வெளியானால் நிலைமை மோசமாகிவிடும்" என்கிறார் குபேந்திரன்.

**"ஓடியோ பதிவு அண்ணாமலைக்கு எப்படி கிடைத்தது?"**

மூத்த பத்திரிகையாளர் தராசு ஷ்யாம் கூறும் போது, 'செலெக்ட்டிவ் கிளிப்பிங் ஆபத்தானது. முழுமையான உரையாடலின் ஓரிரு வார்த்தைகளை மட்டும் வெட்டி ஒட்டி வெளியிட்டால் முற்றிலும் மாறுபட்ட கருத்து கிடைக்கும்.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் இது சாத்தியம். நிதி அமைச்சர் தியாகராஜன் யாரோடு பேசினார்? அது தொலைபேசி உரையாடல் என்றால் அது அண்ணாமலைக்கு எப்படி கிடைத்தது? ஒட்டு கேட்கப்பட்டது என்றால் மத்திய அரசா மாநில அரசா? இந்த கேள்விகளுக்கு இதுவரை விடை இல்லை.

நிதியமைச்சர் தியாகராஜன் தனிப்பட்ட முறையில் வழக்கு தொடர்ந்து முழுமையான ஓடியோ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கலாம் அல்லது பொதுவாழ்வில் தூய்மை என்கிற கோட்பாட்டின் அடிப்படையில் அண்ணாமலையே முழு ஓடியோவை வெளியிடலாம். அவ்வாறு செய்யாத வரை சர்ச்சை தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்." என்றார்.

●

# போருக்கு பின்னான குடியேற்றங்களும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவில்லை. அதற்குப் பின்னால் ஒரு அரசியல் பின்புலம் இருக்கிறது. இவ்வாறான அரசியல் பின்புலங்கள் தமிழர்களுடைய அரசியல் பின்புலங்களுடன் இணைந்து வேலை செய்யும் கட்டமைப்பு இதுவரை உருவாக்கப்படவில்லை' என்று மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சிவயோகநாதன் தெரிவிக்கிறார்.

குடியேற்றங்கள், குடியேறல்கள் சம்பந்தமாக நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று ஆராய்ந்ததன் அடிப்படையில் ஒவ்வோர் இடங்களிலும் ஒவ்வொரு விதமான பிரச்னைகள் காணப்படுகிறது. தமிழ், முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்தில் அன்னியோன்யமாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

திருகோணமலை - முல்லைத்தீவு எல்லைப்பகுதியான தென்னமரவாடி பிரதேசத்தில் சிங்கள மக்கள் அத்துமீறி குடியேற்றப்படுகிறார்கள். இவ்வாறான குடியேற்றங்கள், இனங்களுக்கிடையிலான நல்லுறவு சீர்குலைவதுடன் நல்லிணக்க முரண்நிலைகள் ஏற்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேசத்தில் இருக்கின்ற பிரச்னை ஓரளவுக்கு இணக்கமானதாக இருந்தாலும், திருகோணமலை - தென்னமரவாடி பிரதேசத்தில் சிங்களவர்களின் அத்துமீறல்கள் நிறுத்தப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது தமிழ் மக்களிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதாக அமையும்.

●

# ரணில் பஸிலுடன் சேர்வதால் அவருக்கே பாதிப்பு அதிகம்!

## உதய கம்மன்பில சொல்கிறார்

கொழும்பு, மே 05

நாட்டு மக்களால் கடுமையாக வெறுக்கப்படும் பஸில் ராஜபக்ஷ உட்பட அவரின் தரப்பினருடன் ஒன்றிணைந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும் தடையாக அமையும். ராஜபக்ஷர்களுடன் இனியொருபோதும் ஒன்றிணைய போவதில்லை என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

மே தின கூட்டத்துடன் மக்களாணையை வென்று விட்டோம் என பொதுஜன பெரமுன குறிப்பிடுவது நகைப்புக்குரியது. கெம்பல் மைதானத்தில் இடம்பெற்ற மே தின கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை அடிப்படை கொண்டு பொதுஜன பெரமுனவுக்கு குறிப்பாக ராஜபக்ஷர்களுக்கு மக்களாதரவு எந்தளவுக்கு உள்ளது என்பதை நன்கு விளங்கிக் கொள்ள முடிந்தது. பொதுஜன பெரமுன பிரமாண்டமாக அமைத்த கூடாரங்கள் வெற்றிடமாகவே காணப்பட்டன.

நாட்டு மக்களை ஏமாற்றி அரசியல் செய்யலாம் என்ற நிலை மாற்றமடைந்து விட்டது. மக்கள் தெளிவாக உள்ளார்கள். மக்களால் கடுமையாக வெறுக்கப்படும் பஸில் ராஜபக்ஷ உட்பட அவரது தரப்பினருடன் ஒன்றிணைந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும் தடையாக அமையும்.

2019 ஆம் ஆண்டுக்கு பிறகு ராஜபக்ஷ குடும்பமே நாட்டை ஆட்சி செய்தது. ராஜபக்ஷர்களின் முறையற்ற பொருளாதார கொள்கையை அமைச்சு பதவிகளை வகித்துக் கொண்டு நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். சுட்டிக்காட்டிய குறைகளை அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திருத்திக் கொள்ளவில்லை. மாறாக எங்களை அமைச்சு பதவிகளில் இருந்து நீக்கினார்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். மக்களால் கடுமையாக விமர்சிக்கப்படும் பஸில் ராஜபக்ஷ உட்பட அவரின் சகாக்கள் ஜனாதிபதிக்கு பெரும் தடையாக இருப்பார்கள்.

பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணையுமாறு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் எம்மிடம் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். ராஜபக்ஷர்களுடன் இனி ஒருபோதும் ஒன்றிணைய போவதில்லை. அரசியல் ரீதியில் தனித்து செயல்படுவோம் - என்றார்.

(ஐ)

# அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கம் மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன?

## சரதி ஹேரத் எம். பி. கேள்வி

கொழும்பு, மே 05

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் ஜனாதிபதியின் தீர்மானம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும். சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மக்களாணை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைக்கு எதிரானது என்பதை ஆளும் தரப்பினர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடும் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் ஆளும் தரப்பினர் உள்ளார்கள்.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக மறந்து விட்டார்கள்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக கொள்கையில்லாமல் செயற்படுகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் நாட்டுக்கு எதிரான கொள்கைகளை செயற்படுத்துகிறார்.

சர்வதேச நாணய நிதியம் பொருளாதார மீட்சிக்கான இறுதி தீர்வு என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் செயற்படுகிறது. வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்க முன்னர் தேசிய கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த போவதில்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த பொதுஜன பெரமுனவினர் இன்று கொள்கைக்கு முரணாக செயற்படுகிறார்கள்.

இலங்கை மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம், சிறீ லங்கன் எயார் லைன், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகிய அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும் என அரசாங்கம் குறிப்பிடுகிறது.

நட்டமடையும் அரச நிறுவனங்களுடன் இணைத்து 52 அரச நிறுவனங்களையும் மறுசீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 52 அரச நிறுவனங்களின் பெயர், சொத்து மதிப்பு தொடர்பில் முழுமையான தகவல்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு நிதியமைச்சிடம் பலமுறை வலியுறுத்தினோம். ஆனால் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் ஜனாதிபதியின் தீர்மானம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும். சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மக்களாணை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைக்கு எதிரானது என்பதை ஆளும் தரப்பினர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மின்சார சபையை மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர் 'உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு' சட்டமூலத்தை மின்சாரத்துறை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளார்கள்.

இந்த சட்டமூலத்தின் பல பரிந்துரைகளில் 1976 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க சிலோன் மின்சார சபை சட்டம், 2009ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின்சார சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க சூரிய வளங்கள் பயன்பாட்டு சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின் திருத்தச் சட்டங்கள் ஆகிய சட்டங்களை முழுமையாக இரத்து செய்யும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார்.







# சம்மாந்துறை வலயத்தில் புதனன்று புத்தாண்டு, ரமழான் கலாசார நிகழ்வு

அக்கரைப்பற்று, மே. 05

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் சித்திரை புத்தாண்டு மற்றும் ரம்ழான் பண்டிகை கலாச்சார விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் சிறப்பாக நடை பெற்றது.

நீண்ட காலத்துக்கு பிற்பாடு மூவின உத்தியோ கத்தர்களும் கலந்து கொண்ட இந்த கலாசார விழா வில் பாரம்பரிய கலாசார பட்சணங்கள் பரப்பப் பட்டு பரிமாறப்பட்டன.

நிகழ்வு தொடர்பாக சிரேஷ்ட உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா விளக்கம் அளித்தார். அதைத் தொடர்ந்து வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா "எங்க ளிடையே பரஸ்பரம் நல்லுறவு ஐக்கியம் நிலவுவ தற்கு இப்படியான நிகழ்வுகள் வழிகோலுகின்றன. எமது கலாச்சாரத்தை அடுத்த சந்ததிக்கு கடத்தவும்



செய்கின்றன" என்று கூறினார்.

இலங்கை செஞ்சிலுவை சங்க உத்தியோகத்தர் களும் கலந்து சிறப்பித்தார்கள்.

இறுதியில் உத்தியோகத்தர்கள் அனைவரும் பட்சணங்களை பரிமாறி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்கள்.

(அ)

# காரைதீவில் நாளை கூடைப்பந்தாட்டம்

அக்கரைப்பற்று, மே. 05

காரைதீவு கூடைப் பந்தாட்ட கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகமும் அஸ்கோ அமைப்பும் இணைந்து நடாத்தும் கூடைப்பந்தாட்ட சுற்று போட்டி நாளை சனிக்கி ழமை மாலை நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் யோ. டிலக் சிகன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்போட் டிக்கு பிரதம அதிதியாக அஸ்கோ தலைவர் ஏ.விவேகானந்தராஜா கலந்து சிறப்பிக்கிறார்.

இறுதி சுற்றுப் போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகமும் மட்டக்களப்பு சிவா னந்தா விளையாட்டு கழகமும் மோதுகின்றமை குறிப்பிடத்தக் கது.

(அ)

# இன்று காரைதீவில் இரத்ததான நிகழ்வு

அக்கரைப்பற்று, மே. 05

காரைதீவு விபுலாநந்தா மத் திய கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு பவளவிழாவினை சிறப்பிக்கும் வகையில், கல்லூ ரியின் பழைய மாணவர்கள் ஒன்றியம், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவுடன் இணைந்து நடாத்தும் **"உதிரம் கொடுத்து உயிர் காப்போம்"** இரத்ததான நிகழ்வானது இன்று வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணி முதல் இவ் இரத்த தான நிகழ்வு காரை தீவு விபுலானந்தா மத்திய கல்லூ ரியில் இடம்பெறும்.

வைத்தியசாலைகளில் தற் போது நிலவும் குருதித் தேவைப் பாட்டினை கருத்தில்கொண்டு குருதிக் கொடையாளர்கள் அனைவரும் வருகைதந்து உதவுமாறு பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் லோ. சுலக்ஷன் கோரிக்கை விடுத்தார்.

(அ)

# போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு ஒரு வழிப்பாதையாக மாற்றப்படவுள்ள வீதி

அக்கரைப்பற்று, மே. 05

கல்முனை மாநகர சபைக்குட் பட்ட மஹ்மூத் மகளிர் கல்லூரி மற்றும் ஸாஹிரா கல்லூரி மாணவ, மாணவிகள், ஆசிரியர் களின் போக்குவரத்து சிரமங் களை தவிர்ப்பதற்காக வீதி அபி விருத்தி திணைக்களம் ஒரு வழிப் பாதை பெயர்ப் பலகையை பொருத்தியுள்ளது.

கடந்த காலங்களில் பாடசா லைக்குச் செல்லும் மற்றும் பாட சாலையை விட்டு வீடு செல்லும் நேரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதனால் மாண வர்கள், ஆசிரியர்கள், பொதுமக் கள் என பலரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்த போக்குவரத்தைச் சீர் செய்வதற்கு அண்மைக் காலமாக கலந்துரையாடல்கள் பல்வேறு மட்டங்களில் இடம்பெற்று வந்துள்ளதுடன் கடந்த புதன் கிழமை ஸாஹிரா கல்லூரி வீதியை ஒரு வழிப்பாதை மாற்று வதற்கான பெயர்ப் பலகையை கல்முனை வீதி அபிவிருத்தித் திணைக்களம் நிர்மாணித்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பிரகாரம் குறித்த பெயர்ப்பலகையில் பாடசாலை ஆரம்பிக்கும் நேரங்களில் காலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை மற்றும் பாடசாலை விடும் நேரங்களில் மதியம் 1.30 மணி முதல் 2.30 மணி வரை வெள்ளிக்கிழமை பாடசாலை விடும் நேரமான காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை உள்ள நேரங்களில் பிரதான வீதியிலிருந்து ஸாஹிரா கல்லூ ரி வீதிக்கு எந்தவித வாகனங்க ளும் உட்செல்ல முடியாதவாறு ஒரு வழிப்பாதையாக மாற்றப்ப டவுள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

(அ)



# தங்கப்பதக்கம் வென்றார் மாணவி

அக்கரைப்பற்று, மே. 05

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாக நடத் தப்பட்ட விஞ்ஞான வினா- விடைப் போட்டியில் அக்கரைப் பற்று தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் மாணவி எம்.ஐ. எப்.இப்பத் ஆங்கிலமொழி மூலப் போட்டியில் தங்கப்பதக் கத்தை பெற்றார்.

அந்த மாணவியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசா லையின் அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் கடந்த புதன்கி ழமை இடம்பெற்றது.

(அ)

# நிதி முகாமைத்துவ டிப்ளோமாவை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்

திருமலை, மே. 05

ஐ.நா. அபிவிருத்தி திட்ட அனுசரணையில் அமுல்படுத்தப்படும் கிழக்கு மாகாண உள்ளூ ராட்சி மன்றங்களின் திறன் விருத்தி செயற்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண உள்ளூ ராட்சித் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 6 மாதகால நிதி முகாமைத் துவ டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர் களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா கடந்த 2ஆம் திகதி திருகோணமலை இந்து கலாசார மண்டபத் தில் இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனு ராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம். பி.எஸ்.ரத்னாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, பிரதிப் பிரதம செயலாளர்க ளான (நிர்வாகம்) ஆ.மன்சூர், ஆளணி மற்றும் பயிற்சி திருமதி ஆர்.யு.அப்துல் ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முதளி தரன், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே. ஜீ.முத்துபண்டா, சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திரு மதி இ.சிறீதர், கிராமிய கைத்தொழில் திணைக்கள மாகாண பணிப்பாளர் திருமதி யு.கவிதா உள்ளிட்ட





மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள், மாகாண ஆணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக் களப்பு மற்றும் திருகோணமலை போன்ற மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உத்தி யோகத்தர்களிடம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான 6 மாதகால டிப் ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட் டதற்கமைவாக, அதில் தெரிவு செய்யப்பட்டவர்க ளில் 56 பேர் குறித்த பயிற்சி நெறியை முழுமையாக நிறைவு செய்திருந்தனர். அவர்களுக்கான சான்றிதழ் களை அதிதிகளினால் வழங்கப்பட்டன.

(அ)

# ஆரையம்பதியில் குடும்பஸ்தர் ஆற்றில் இருந்து சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, மே. 05

காத்தான்குடி பொலிஸ்பிரி விற்குட்பட்ட ஆரையம்பதி பிர தேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் ஆற்றில் இருந்து சடலமாக மீட் கப்பட்ட சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பழைய கல்முனை வீதி ஆரை யம்பதி பிரதேசத்தை சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான பூபாலபிள்ளை யோகநாதன் (வயது-62) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் மீன்பிடித் தொழி லில் ஈடுபட்டு வருபவர் என்றும் சம்பவ தினத்துக்கு முதல் நாள் தனது வள்ளத்தில் மீன்பிடிப்ப தற்காக சென்றவர் மறுநாள் வீடு திரும்பாத நிலையில் மீனவர்கள், குடும்பத்தினர் குறித்த ஆற்றுப் பகுதிக்குச் சென்று தேடுதலில் ஈடுபட்டபோது நீரில் மூழ்கிய நிலையில் ஆற்றிலிருந்து சடல மாக மீட்கப்பட்டார் என பொலி ஸாரின் ஆரம்ப கட்ட விசாரணை களின் போது தெரியவந்துள்ளது.

(அ)

# இறைச்சிக் கடைகளை 3 நாள்கள் மூட உத்தரவு

அக்கரைப்பற்று, மே. 05

கல்முனை மாநகர சபை எல் லையினுள் இயங்கி வரும் மாட் டிறைச்சிக் கடைகள், ஆட்டி றைச்சிக் கடைகள் மற்றும் கோழி யிறைச்சிக் கடைகள் யாவும் மூடப்பட வேண்டும் என மாந கர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பணிப்புரை விடுத்துள் ளார்.

வெசாக் பண்டிகையை முன் னிட்டு பொது நிர்வாக, உள்நாட் டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக நாடு முழுவதும் நேற்று வியாழக்கி ழமை முதல் நாளை சனிக்கிழமை வரையான 03 நாட்களுக்கு மாடு, ஆடு மற்றும் கோழி என்பன அறுத்து, விற்பனை செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள் ளது.

இதன் பிரகாரம் மேற்படி 03 தினங்களும் கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற மாட்டிறைச்சிக் கடை கள், ஆட்டிறைச்சிக் கடைகள் மற்றும் கோழியிறைச்சிக் கடை கள் யாவும் மூடப்பட வேண்டும் என மாநகர ஆணையாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் கல்முனை மாந கர சபை எல்லையினுள் சேனைக் குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மணல்சேனை,மருதமுனை, பெரி யநீலாவணை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது,கல்முனை மாநகர பகுதிகளில் மாட்டிறைச்சிக் கடைகள், ஆட்டிறைச்சிக் கடை கள் மற்றும் கோழியிறைச்சிக் கடைகள் இயங்கி வருகின்றமை யும் சுட்டிக்காட்டத்தக்கது.

இதே வேளை கல்முனை மாந கர சபை எல்லையினுள் மாட் டிறைச்சியை கட்டுப்பாட்டு விலையில் விற்பதற்கு சில இறைச் சிக்கடை உரிமையாளர்கள் உதாசீனமாக செயற்படுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள் ளனர்.

(அ)

# கிரெம்ளின் மாளிகை மீதான உக்ரைனின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கப்படும்!

## ரஷ்யா கடுமையான எச்சரிக்கை

மொஸ்கோ, மே. 05

**அதிபர் விளாடிமிர் புடின் வசிக்கும் மாளிகை மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், "எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும்" பதிலடி கொடுக்க தமக்கு உரிமை உள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.**



நேற்று முன் தினம் இரவு மொஸ்கோவில் உள்ள அதிபர் மாளிகையான கிரெம்ளினை இலக்கு வைத்து பறந்த இரண்டு ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யா கூறியுள்ளது.

அத்துடன், அதிபர் விளாடிமிர் புடினை கொல்ல அவை ஏவப்பட்டிருப்பதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

ஒரு சிறிய வெடிப்புடன் கிரெம்லினில் ஏதோ பறப்பது போன்ற காட்சிகள் சமூக வலைத் தளங்களில் பகிரப்படுகின்றன.

எவ்வாறாயினும், ஆளில்லா விமான தாக்குதலுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என உக்ரைன் தெரிவித்துள்ளது.

இரண்டு உக்ரேனிய ஆளில்லா விமானங்கள் புதன்கிழமை அதிகாலை கிரெம்லினைத் தாக்க முயன்றதாகவும், ஆனால் அந்த திட்டம் முறியடிக்கப்பட்டதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த "பயங்கரவாத தாக்குதலில்" அதிபர் காயமடையவில்லை என்றும் கிரெம்ளினின் மாளிகை வளாகத்திற்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்றும் புடினின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மே 9 ஆம் திகதி ரஷ்யா வெற்றி தின கொண்டாட்டங்களுக்கு தயாராகி வருகிறது.

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு எதிரான வெற்றியின் நினைவாக கிரெம்ளின் மாளிகை அருகில் சிவப்பு சதுக்கத்தில் வருடாந்தம் இராணுவ அணிவகுப்பு நடத்தப்படுகிறது. (அ)



# கிரெம்ளினை தாக்கவில்லை!

## மறுக்கிறார் உக்ரைன் ஜனாதிபதி

கீவ், மே. 05

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி புதன்கிழமை தனது நாடு ரஷ்யா வையோ அல்லது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினையோ தாக்கவில்லை என்று கூறினார்.

"நாங்கள் புடினையோ அல்லது மொஸ்கோவையோ தாக்கவில்லை, நாங்கள் எங்கள் பிரதேசத்தில் போராடுகிறோம்" என்று ஹெல்சிங்கியில் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் ஜெலென்ஸ்கி கூறினார்.

மொஸ்கோவில் உள்ள கிரெம்ளின் கோட்டை மீது ஆளில்லா விமானம் மூலம் ஜனாதிபதி விளாடிமிர் புடினைக் கொல்ல உக்ரைன் முயற்சி தோல்வியடைந்ததாக ரஷ்யா புதன்கிழமை குற்றம் சாட்டியதுடன், உரிய பதிலடி கொடுக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# உலக வங்கிக்கு புதிய தலைவர்!

நியோயோர்க், மே. 05





உலக வங்கியின் புதிய தலைவராக இந்தியர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் சீக்கிய குடும்பமொன்றில் பிறந்த 63 வயதான அஜய் பாங்கா, என்பவரே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலக வங்கி குழுமத்தின் தலைவராக 2019 ஆம் ஆண்டு பதவியேற்ற டேவிட் மால்பாஸ், பதவி காலம் 2024 ஆம் ஆண்டு நிறைவடைகின்றது.

இருப்பினும் முன்கூட்டியே பதவி விலகுவதாக அவர் அறிவித்தார்.

இந்நிலையில் புதிய தலைவர் நியமனம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஆலோனை நடத்தினார்.

அதில், சர்வதேச நிதி நிறுவனமான மாஸ்டர் கார்ட் நிறுவனத்தின் முன்னாள்பிரதம நிறைவேற்று அதிகாரியும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான அஜய் பால்சிங் பங்காவை, உலக வங்கியின் அடுத்த தலைவர் பதவிக்கு ஜோ பைடன் பரிந்துரை செய்துள்ளார்.

இதுவரை தலைவர் பதவிக்கு போட்டியிட அஜய் பங்கா மட்டுமே மனு தாக்கல் செய்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

எனவே அவர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில், அஜெய் பங்கா ஐந்து ஆண்டுகள் இப்பதவியில் இருப்பார் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சேர்பியப் பாடசாலையில் மாணவன் துப்பாக்கிச்சூடு!

## 9 பேர் உயிரிழப்பு

பெல்கிரேட், மே. 05

சேர்பியாவின் தலைநகரில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 8 சிறுவர்களும் காவலாளி ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 6 மாணவர்களும் ஆசிரியர் ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் 14 வயது மாணவர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாணவர் தனது தந்தையின் துப்பாக்கியை பயன்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

சேர்பியாவில் இவ்வாறான துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளமை இதுவே முதல் தடவை என அந்நாட்டின் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட பின்னர், குறித்த மாணவர் தாமாகவே பொலிஸாருக்கு அழைப்பு மேற்கொண்டு, தகவல் தெரிவித்ததாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தாக்குதலுக்கான காரணம் தொடர்பில்



பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும், துப்பாக்கிச்சூடு நடத்திய மாணவர் ஒரு மாதத்திற்கு முன்பே தாக்குதலைத் திட்டமிட்டுள்ளதாகவும், அவர் இலக்கு வைக்கும் சிறுவர்களின் பட்டியலை எடுத்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் 2009 இல் பிறந்தவர்கள் - அதாவது சம்பவத்தின் போது அவர்களுக்கு 13 அல்லது 14 வயது இருக்கும் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், சேர்பியாவில் மூன்று நாட்களுக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (அ)

# ரஷ்ய எண்ணெய் ஆலை மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்!

மொஸ்கோ, மே. 05

ரஷ்யாவின் தெற்கு கிராஸ்னோடர் பகுதியில் உள்ள இல்ஸ்கி குடியிருப்பில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டுள்ளதாக பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கிராஸ்னோடர் கவர்னர் வெனியமின் கோண்ட்ராடியேவ், சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட தீ 400 சதுர மீற்றர் (4,300 சதுர அடி) பரப்பளவில் உள்ளதாகவும், வியாழக்கிழமை காலை ட்ரோன் தாக்குதலைத் தொடர்ந்து அவசர சேவைகள் மூலம் விரைவாக அணைக்கப்பட்டதாகவும் ரஷ்யாவின் டாஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை அருகிலுள்ள கிராமமான வோல்னாவில், எண்ணெய் தேக்கத்தில் இதே போன்ற தீ 1,200 சதுர மீற்றர் (கிட்டத்தட்ட 13,000



சதுர அடி) எரிந்தது. உக்ரைனின் ட்ரோன் தாக்குதலால் இது நடந்ததென கருதப்படுகிறது.

ரஷ்ய எல்லைக்குள் அல்லது ரஷ்யாவால் இணைக்கப்பட்ட உக்ரைனின் சில பகுதிகளுக்குள் வெளிப்படையான நாசவேலை தாக்குதல்கள் குறித்து உக்ரைன் கருத்து தெரிவிக்கவில்லை. (அ)

# பனாமா எண்ணெய் கப்பலை சிறைப் பிடித்தது ஈரான் அரசு

நியூயோர்க், மே. 05



பனாமா நாட்டுக்குச் சொந்தமான எண்ணெய் கப்பல் நேற்று கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு பாரசீக வளைகுடா கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்தது.

அப்போது, அந்த எண்ணெய் கப்பலை ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் ஈரான் கடற்படை இடைமறித்துள்ளது.

சர்வதேச கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்த பனாமா எண்ணெய் கப்பலை ஈரான் கடற்படை இடைமறித்து தங்கள் எல்லைக்குள் கொண்டு சென்றதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேவேளை, பனாமா எண்ணெய் கப்பலை சிறைபிடித்தது தொடர்பாக ஈரான் இதுவரை எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# பிரெஞ்சு ஓப்பன், விம்பிள்டன் தொடர்களில் எம்மா விலகல்!

லண்டன், மே 05

இங்கிலாந்தை சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனை எம்மா ரடுகானு. 2021ஆம் ஆண்டு அமெரிக்க ஓப்பன் பட்டத்தை வென்றவரான அவர், இந்த ஆண்டுக்கான பிரெஞ்சு ஓப்பன் மற்றும் விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

கை மற்றும் கணுக்காலில் ஏற்பட்ட காயத்துக்காக சத்திர சிகிச்சை செய்து கொண்டார். சமீபத்தில் நடந்த மட்ரிட் ஓப்பனில் இருந்து கையில் காயத்துடன் வெளியேறி இருந்தார்.

காயம் காரணமாக அவர் கிராண்ட் ஸ்லம் போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறும் போது, கிராண்ட் ஸ்லம் போட்டிகளை தவறவிடுவேன் என்பது எனக்கு வேதனை அளிக்கிறது. என்னை ஆதரித்த என்று ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி என்றார்.

# விறுவிறுப்பான போட்டியில் பஞ்சாப்பை வென்றது மும்பை!




மொஹாலி, மே 05

இந்திய நட்சத்திரங்களான இஷான் கிஷன், சூரிய குமார் யாதவ் ஆகியோரின் அபார அரைச்சதங்களின் உதவியுடன் மும்பை இந்தியன்ஸ் 6 விக்கெட்களால் பஞ்சாப் கிங்ஸை வெற்றி பெற்றது.

மொஹாலியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நடைபெற்ற ஐ. பி. எல். போட்டியில் பஞ்சாப் - மும்பை அணிகள் மோதின.

கடைசி வரை விறுவிறுப்பை ஏற்படுத்திய இந்தப் போட்டியில், பஞ்சாப் கிங்ஸால் நிர்ணயிக்கப்பட்ட 215 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் 18.5 ஓவர்க ளில் 4 விக்கெட்களை இழந்து 216 ஓட்டங்களைக் குவித்து வெற்றியீட்டியது.

ஆரம்பத்தில் ஓட்டம் சேராத நிலையில் ரோஹித் ஷர்மா ஆட்டம் இழந்தது மும்பைக்கு நெருக்கடியைக் கொடுத்தது. தொடர்ந்து மொத்த ஓட்ட எண்ணிக்கை 54ஆக இருந்தபோது கெமரூன் கிறீன் (23) களம் விட்டகன்றார்.

இந் நிலையில் இஷான் கிஷன், சூரியகுமார் யாதவ் ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டுக்காக 116 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலமான நிலையில் இட்டு 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர்.

எவ்வாறாயினும் திலக் வர்மாவும் ரிம் டேவிடும் பிரிக்கப்படாத 5ஆவது விக்கெட்டில் 38 ஓட்டங்களைப் பகிர்ந்து மும்பை இந்தியன்ஸை வெற்றி அடையச் செய்தனர். முன்னதாக இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத் தாடிய பஞ்சாப் கிங்ஸ் 20 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 215 ஓட்டங்களைக் குவித்தது.

பஞ்சாப் கிங்ஸ் 11.2 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 95 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தபோது ஜோடி சேர்ந்த லியொம் லிவிங்ஸ்ரன், ஜிதேஷ் சர்மா ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டுக்காக 52 பந்துகளில் 119 ஓட்டங்களை பகிர்ந்து மொத்த எண்ணிக்கைக்கு வலு சேர்த்துக்கொடுத்தனர். ஆனால், இறுதியில் அவர்கள் இருவரின் முயற்சி வீண்போனது.

(ஐ)

# நியூசிலாந்துடனான தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்




கராச்சி, மே 05

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதிய 3ஆவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் பகல் - இரவு ஆட்டமாக கராச்சியில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 287 ஓட்டங்கள் எடுத்தது. இமாம் - உல் ஹக் 90 ஓட்டங்களும் அணித் தலைவர் பாபர் அஸாம் 54 ஓட்டங்களும் எடுத்தனர்.

நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 3 விக்கெட்களும், அடம் மில்னே 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர் ரொம் ப்ரூடெல் 65 ஓட்டங்களும், அணித்தலைவர் ரொம் லதாம் 45 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தார்கள். அந்த அணி 196 ஓட்டங்களுக்கு (41.2 ஓவர்) 6 விக்கெட்டை இழந்தது.

கோல் மெக்கோஞ்சி கடைசி வரை போராடினார். நியூசிலாந்து 49.1 ஓவரில் 261 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

மெக்கோஞ்சி 45 பந்தில் 64 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அதனால் பாகிஸ்தான் 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணி முதல் மற்றும் 2 ஒருநாள் போட்டிகளில் வென்று இருந்தது. இந்த ஹட்ரிக் வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியது.

இதன் மூலம் 12 ஆண்டுகளுக்கு பிறகு நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி வென்று சாதனை படைத்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான 4ஆவது போட்டி இன்று நடக்கிறது.

(ஐ)




# ஏப்ரலின் சிறந்த வீரர் விருதுக்கு பிரபாத் ஜெயசூரியவும் தெரிவு!

டுபாய், மே 05

2023 ஏப்ரல் மாத்துக்கான அதிசிறந்த ஐ. சி. சி. வீரர், வீராங்கனை விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஆறு வீரர்களில் இலங்கையர்களான பிரபாத் ஜெயசூரிய, கவிஷா எகொடகே ஆகியோரும் இடம் பெறுகின்றனர்.

பிரபாத் ஜெயசூரிய இலங்கை அணிக்காகவும் கவிஷா எகொடகே ஐக்கிய அரபு இராச்சியத்துக்காகவும் விளையாடி வருகின்றனர்.

மாதத்தின் சிறந்த வீரருக்கான விருதை பிரபாத் ஜெயசூரிய 2022 ஜூலை முதல் தடவையாக வென்றிருந்தார்.

கடந்த வருடம் ஜூலை 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பிரபாத் ஜெயசூரிய 29 விக்கெட்களை மொத்தமாக வீழ்த்தியதன் மூலம் ஐ. சி. சி. விருதை தனதாக்கிக் கொண்டிருந்தார்.

காலியில் கடந்த மாதம் நடைபெற்ற அயர்லாந்துக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட தொடரில் 17 விக்கெட்களைக் கைப்பற்றிய பிரபாத் ஜெயசூரிய தொடர் நாயகனாக தெரிவாகியிருந்தார்.

இந்த ஆற்றல் மூலம் 146 வருட டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் விரைவாக 50 விக்கெட்களை பூர்த்தி செய்த சுழல்பந்துவீச்சாளர் என்ற சாதனைக்கு பிரபாத் ஜெயசூரிய சொந்தக்காரரானார்.

மாதத்தின் அதிசிறந்த வீரருக்கான ஐ. சி. சி. விருதுக்கு நியூசிலாந்தின் மார்க் செப்மன், பாகிஸ்தானின் பக்கார் ஷமான் ஆகியோரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய அரபு இராச்சியத்துக்காக விளையாடி வரும் இலங்கையரான கவிஷா எகொடகேயும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர், அந்த அணிக்காக 8 மகளிர் சர்வதேச இருபது -20 கிரிக்கெட் போட்டிகளில் கவிஷா எகொடகே ஓர் அரைச்சதம் உட்பட 236 ஓட்டங்களை மொத்தமாக பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தவிர, தாய்லாந்தின் நருமோல் சாய்வாய், சிம்பாப்வேயின் கெலிஸ் எண்டிலோவு ஆகியோரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மீண்டும் பிரதமர் பதவியை குறி வைக்கின்றார் மகிந்த?

## ரணிலை சந்தித்து கோரிக்கை முன்வைப்பு

கொழும்பு, மே. 05

**பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர் பதவியைக் கைப்பற்றும் முயற்சியைத் தீவிரப்படுத்தியுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

**அண்மையில மகிந்த, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து இதற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.**

மீண்டும் ராஜபக்ஷ குடும்பத்தின் அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டும் என்றால் - அடுத்த தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்றால் மீண்டும் மகிந்த பிரதமராகி களத்தில் இறங்க வேண்டும் என்ற யோசனை குடும்பத்தாலும் கட்சியாலும் முன்வைக்கப்பட்டதால் மீண்டும் பிரதமர் பதவியைக் கைப்பற்றும் முயற்சியில் மகிந்த இறங்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

மறுபுறம், மகிந்தவை பிரதமராக்கி தனது ஆதிக்கத்தை இலங்கைக்குள் நிலைநாட்டவேண்டிய தேவை சீனாவுக்கு எழுந்துள்ளது. இதனால் சீனாவின் உந்துதலிலும் மகிந்த இப்போது பிரதமர் பதவியைக் குறிவைத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் அடிக்கடி மகிந்தவை அவரது விஜயராம இல்லத்தில் சந்தித்து வருகின்றார் என்றும் மகிந்த பிரதமரானால் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு 6 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்குவதற்குச் சீனா உறுதியளித்துள்ளது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழ் -சிங்களப் புத்தாண்டுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைத் தொடர்பு கொண்ட மகிந்த, அவரைச் சந்திப்பதற்கு நேரம் வழங்கவேண்டும் என்று கேட்டிருந்ததாக கூறப்படுகின்றது.

அதன்படி. சில நாட்களுக்கு முன் ரணிலுக்கும் மகிந்தவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் பிரதமர் பதவியை மகிந்த கேட்டார் என்றும் அதற்குப் பிரதி உபகாரமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை மொட்டுக் கட்சியின் வேட்பாளராக நிறுத்துவதாகவும் மகிந்த கூறி இருந்தார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (அ)

அதிக விலைக்கு முட்டை விற்பனை;

# வர்த்தகர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் அபராதம்

கொழும்பு, மே. 05

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் அபராதம் விதித்துள்ளது.

அதன்படி, ஒவ்வொருவரும் தலா ஒரு லட்சம் ரூபாவை அபராதமாக செலுத்த வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்த மூன்று வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டனர்.

குற்றம் சாட்டப்பட்ட மூவரும் நுவரெலியா, நானுஓயா மற்றும் லிந்துலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

மேலும், நுவரெலியா மாவட்ட எல்லைக்குட்பட்ட பல முக்கிய நகரங்களில் சோதனைகள் நடத்தப்பட்டதுடன், கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் அரிசி விற்பனை செய்தமை, காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்தமை மற்றும் விலைகளை காட்சிப்படுத்தாமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில் 16 சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டனர். (அ)

# நாட்டில் மூன்று நோய்கள் குறித்து சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை!

கொழும்பு, மே. 05

டெங்கு, மலேரியா, எலி காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், 48 மணி நேரத்திற்கு மேல் காய்ச்சல் நீடித்தால் மருத்துவ சிகிச்சை பெறுமாறு சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

மக்கள் தாங்கள் எந்த நோயால் பாதிக்கப்படுகிறார்கள் என்பது குறித்து சொந்த முடிவுகளை எடுக்கவேண்டாம் என்று சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

டெங்கு, மலேரியா மற்றும் எலிக் காய்ச்சல் ஆகிய நோய்களும் தற்போது வியத்தகு அளவில் அதிகரித்துள்ளன.

எனவே, 48 மணி நேரத்திற்கும் மேலாக காய்ச்சல் நீடித்தால், உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுவதற்கு முன்னுரிமை அளிக்குமாறு சுகாதார அதிகாரிகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் 2023 ஆம் ஆண்டில் 30,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதற்கிடையில், மழைக்காலத்தில் எலிக்காய்ச்சலால் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தொற்றுநோயியல் பிரிவின் கூற்றுப்படி, இரண்டு பருவமழைகளைத் தொடர்ந்து எலிக்காய்ச்சல் உச்சத்தை அடைவதால், பருவகால மாறுபாட்டால் நோய் பரவும் அச்சுறுத்தல் காணப்படுகிறது.

இந்த சூழலில், சுகாதார அதிகாரிகள், குறிப்பாக உள்ளங்கால் அல்லது கால்களில் காயங்கள் வெளிப்பட்டால், தண்ணீர் அல்லது சேற்றில் இறங்குவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

காய்ச்சல், தசைவலி, நிறம் மாறுதல் போன்ற நோயின் அறிகுறிகள் இருந்தால் அரச மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் என்றும் சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், மலேரியா எதிர்ப்பு பிரசாரத்தின் பணிப்பாளர், வைத்தியர் சம்பா அலுத்வீர கூறுகையில்-

மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கையும் கடந்த ஆண்டை விட ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது.

2022 இல் மொத்தம் 37 மலேரியா நோயாளிகள் பதிவாகினர். இருப்பினும், ஜனவரி 2023 முதல் 17 மலேரியா நோயாளிகள் உள்ளனர். அனைத்து நோயாளிகளும் வெளி நாடுகளில் இருந்து திரும்பியவர்களாவர்.

அண்மையில் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய பேருவளையைச் சேர்ந்த ஒருவர் மலேரியா நோயினால் உயிரிழந்துள்ளதாக களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது-என்றார். (அ)

# குடும்ப தகராறில் மனைவி கொலை!

## கணவன் கைது

கொழும்பு, மே. 05

எல்பிட்டிய, திவித்துர வத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

எல்பிட்டிய திவித்துர வத்த பிரதேசத்தில் வசிக்கும் 33 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான யோவான் ரெனிதா மேரி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் கூறினர்.

குறித்த பெண்ணின் கொலை தொடர்பில் அவரது கணவர் கத்தியுடன் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைக்கு குடும்பத் தகராறு காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# வவுனியா ஊடகவியலாளர்களை கண்டதும் பின் கதவால் ஓடினார் இராஜாங்க அமைச்சர்

வவுனியா, மே. 05

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களைக் கண்டதும் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இருந்து பின் கதவால் கிராமிய இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்வெளியேறிச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்கள் கூட்டம் முடிந்து வந்த வடக்கு ஆளுநர், மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவர் ஆகியோரிடம் தம்மைக் கூட்ட மண்டபத்துக்கு அனுமதிக்காமை தொடர்பில் கேள்வி எழுப்பினர்.

இதனை அவதானித்த கிராமிய இராஜாங்க அமைச்சரின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் தம்மை ஏன் உள்ளே அனுமதிக்கவில்லை எனக் கேள்வி எழுப்புகிறார்கள் என்ற விடயத்தை இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இதனையடுத்து, கூட்ட மண்டபத்தின் பின் வாசல் பகுதிக்குத் தனது வாகனத்தை வரவழைத்து அங்கிருந்து ஊடகவியலாளர்களைச் சந்திக்காது இராஜாங்க அமைச்சர் தனது சகாக்களுடன் வெளியேறியுள்ளார். (அ)

# இலங்கை சுற்றுலாத் துறையை மேம்படுத்த எமிரேட்ஸுடன் புதிய ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, மே. 05

இலங்கையை, சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த இடமாக மேம்படுத்துவதற்காக எமிரேட்ஸுடன் உடன்படிக்கையொன்றை இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

டுபாயில் இலங்கை சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் எமிரேட்ஸ் பிரதம வர்த்தக அதிகாரி அட்னான் காசிம் ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்வின்போது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இது எமிரேட்ஸ் தனது உலகளாவிய வலையமைப்பின் ஊடாக இலங்கையை மேம்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தம் உதவும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் குறித்த அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கூறுகையில்-

அழகிய கடற்கரைகள், பசுமையான மழைக்காடுகள் மற்றும் வளமான கலாசாரம் மற்றும் வரலாறு ஆகியவற்றிற்கு பெயர் பெற்ற இலங்கை ஒரு பிரபலமான சுற்றுலாத் தலமாகும்.

2019 இல் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளில் இருந்து நாடு மீண்டு வருகிறது. மேலும் சுற்றுலாத் துறை மெதுவாக இயல்பு நிலைக்குத் திரும்புகிறது.

எமிரேட்ஸுடனான கூட்டாண்மை, சுற்றுலாத் துறைக்கு ஒரு பெரிய ஊக்கமாக உள்ளது மேலும் இது வரும் ஆண்டுகளில் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இலங்கைக்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது-என்றார். (அ)

# கோதுமை மா விலை உயராது

கொழும்பு, மே. 05

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளபோதிலும், தற்போதைக்கு விலையை அதிகரிக்கவேண்டிய அவசியமில்லை என அத்தியாவசிய இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பிரிவு அதிகாரி நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

உலக சந்தையில் கோதுமை மாவின் விலை குறைந்துள்ளமையே இதற்குக் காரணம்.

எவ்வாறாயினும், ஒரு கிலோ கோதுமை மாவுக்கான 25 ரூபாவாக இருந்த வரி தற்போது 45 ரூபாவாக அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் கோதுமை மாவின் விலை அதிகரிக்கும் பட்சத்தில் இந்த நாட்டிலும் கோதுமை மாவின் விலையை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார்.

தற்போது ஒரு கிலோ கோதுமை மாவின் மொத்த விலை 200 முதல் 205 ரூபாய் வரை உள்ளது.

இதேவேளை, கோதுமை மாவுக்கான வரி அதிகரிக்கப்பட்டாலும், பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது என அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் எம்.கே.ஜெயவர்தன கூறினார். (அ)

## ஒட்டுசுட்டானில்...

இதன்போது, இராணுவ அதிகாரி ஒட்டுசுட்டான் நகர மையப்பகுதியில் நீர்ப்பாசன திணைக்களத்தின் 25 ஏக்கர் காணி மற்றும் இரண்டு தனிநபர் காணி மற்றும் இந்து மயானம் ஆகியவற்றை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள 64ஆவது படைப்பிரிவு முகாமுக்கான காணி ஆவணங்களை வழங்குமாறு கோரினார்.

இந்நிலையில் மக்களின் காணி இந்து மயானம் என்பன விடுவிக்கப்படும் என்றும் நீர்ப்பாசன திணைக்களத்துக்கு சொந்தமான காணியை விடுவிப்பது தொடர்பில் நீர்ப்பாசன திணைக்களம் கருத்து வழங்கவில்லை என்றும் தெரிய வருகின்றது. எனினும், இந்தக் காணியை இராணுவம் தொடர்ந்தும் தம்வசம் வைத்திருக்கும் என்றே தெரிய வருகின்றது. (ஐ)

## போரை...

தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்.

தையிட்டி பகுதியில் மக்களுக்கு சொந்தமான காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட விகாரையை அகற்றவும் - காணிகளை விடுவிக்கவும் கோரி நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆரம்பித்த போராட்டம் நேற்று முன்தினம் இரவும் தொடர்ந்தது.

மழை பெய்ததாலும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தங்கியிருப்பதற்ககாகவம் விகாரையின் முன்பாகவுள்ள காணியில் பந்தல் போடப்பட்டது. இந்தப் பந்தலை அமைக்கவிடாது பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர். இது தொடர்பாக சம்பவ இடத்திலிருந்த பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

“சட்டவிரோத விகாரையை அகற்றி காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோரி இந்த போராட்டம் நடக்கிறது. விகாரைக்கு முன்பாக உள்ள ஜெயக்குமாரின் காணிக்குள், அவரது ஒத்துழைப்புடன் கொட்டகை அமைக்கப்பட்டது. பொலிஸார் மிலேச்சத்தனமாக நடந்து, அவற்றை அகற்ற வைத்துள்ளனர். கொட்டகைகளை அரசுடைமையாக்கி விடுவோம் என மிரட்டினர்.

அங்கிருந்த பொலிஸ் அதிகாரியொருவர், “நாங்கள் யுத்தத்தை வென்றவர்கள். உங்களை எப்படி நடத்துவதென எங்களுக்கு தெரியும்“ என வெறித்தனமாக தெரிவித்தார். அவரது மனதில் கொலை வெறி இருந்ததை பார்க்க முடிந்தது. அவர்கள் சில வேளைகளில் எங்களை கொலைசெய்து விடவும் கூடும். அந்தளவு வெறிகொண்டுள்ளனர். இவர்களை பௌத்த பிக்குகள் வழிநடத்துகிறார்களா அல்லது ரணில் வழிநடத்துகிறாரா எனத் தெரியவில்லை.

அதிலும், ஒரு தமிழ் பொலிஸ்காரர்-தானொரு தமிழன் எனக் கூறிக்கொண்டு வெட்கம்கெட்ட முறையில் சட்டத்துக்கு புறம்பாக உரிமையாளரின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட கொட்டகையை அகற்றுவதில் அவர்தான் சிங்களம் பேசுபவர்களைவிட தீவிரமாக செயல்பட்டார் - என்றார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் கருத்து தெரிவிக்கையில்,

இரவு நேரத்தில் மக்களை விரட்டியடித்த பொலிஸார், பாராளுமன்ற உறுப்பினர்கள் செ. கஜேந்திரன் சட்டத்தரணி காண்டீபனை சிறைப்பிடித்துள்ளனர். அவர்களை அணுகுவதற்கான எமது உரிமையை தடுப்புக்காவல் போட்டு பொலிஸார் தடுத்துள்ளனர். உதயபால என்கிற பொலிஸ் பொறுப்பதிகாரியும், கலாவினோதன் என்கிற தமிழ் பொலிஸ்காரர் மிருகத்தனமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் நடப்பதை அவதானிக்க முடிகிறது - என்றார். (ஐ-03)

## காய்ச்சல்...

ஆண்டில் இதுவரையில் 30ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் மேல் மாகாணத்தில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே காணப்படுகின்றனர். எனவே, காய்ச்சல் போன்ற நிலைமைகள் ஏற்படும் போது உடனடியாக மருத்துவர்களை நாட வேண்டியது அவசியமாகும்.

இதே வேளை கடந்த ஓரிரு வாரங்களாக கோவிட் தொற்றாளர்களும் இனங்காணப்பட்டு வருகின்றனர். ஆசிய நாடுகளான இந்தோனேசியா, வியட்நாம், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் அதிகளவான கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். எனினும், இந்த நிலைமை குறித்து நாம் வீண் அச்சமடையத் தேவையில்லை.

எவ்வாறிருப்பினும் கோவிட் காலத்தில் பின்பற்றிய சுகாதார வழிமுறைகளை தொடர்ந்தும் பேணுவதே ஆரோக்கியமானதாகும். குறிப்பாக நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் மற்றும் முதியோர் மிக அவதானமாக செயற்பட வேண்டும். இதே போன்று தற்போது எலிக்காய்ச்சல் பரவும் வீதமும் அதிகரித்து வருகிறது.

பற்றீரியாவினூடாகவே எலிக்காய்ச்சல் பரவுகின்றது. விலங்குகளின் சிறுநீரிலிருந்து இந்த பற்றீரியாக்கள் பரவுகின்றன. வயல் போன்ற பகுதிகளிலேயே குறித்த பற்றீரியாக்கள் அதிகளவில் பரவி காணப்படும். இதனால் ஏற்படக் கூடிய எலிக்காய்ச்சல் தீவிரமடைந்து மரணம் கூட சம்பவிக்கக் கூடும். மார்ச் தொடக்கம் மே மாதம் வரை பெரும்போக நெற்செய்கைக் காலம் என்பதால் விவசாய சமூகத்தினர் அவதானத்துடன் செயல்பட வேண்டும்.

காய்ச்சல் , கண் சிவத்தல் , தசை வலி, மஞ்சள் நிறத்தில் சிறுநீர் செல்லல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் தாமதமின்றி மருத்துவர்களை நாட வேண்டும் - என்றார்.

## விகாரையில்...

அத்துடன், விகாரைக்கு எதிரில் உள்ள காணியில் போராட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்றும் நீதிவான் அனுமதி வழங்கினார்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை, தையிட்டி விகாரைப் பகுதிக்கு நேரில் சென்ற நீதிவான் நிலைமைகளை நேரில் அவதானித்தார். இதன் பின்னரே மேற்கண்ட உத்தரவுகளை பிறப்பித்தார்.

தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டம் நடத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உட்பட கைது செய்யப்பட்ட ஐவர் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இந்த வழக்கு விசாரணையின் போது விகாரைக்கு முன்பாக போராட்டம் நடத்துவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று பொலிஸார் மன்றில் கோரி னர்.

இதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு நேரில் வந்து பார்வையிட்ட பின்னர் உத்தரவு வழங்குவதாக நீதிவான் குறிப்பிட்டார்.

இதையடுத்து நேற்று மாலை விகாரைப் பகுதிக்கு நீதிவான் சென்று நிலைமைகளை அவதானித்தார். இதன்போது, “ஒவ்வொருவரும் அமைதிக்கு பங்கம் விளைவிக்காத வகையில் செயல்பட வேண்டும். விகாரையின் முகப்பிலோ, பாதையிலோ தடைகளை ஏற்படுத்தக் கூடாது. விகாரையில் வழிபாட்டுக்குவரும் மக்களுக்கோ, விகாரையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கோ இடையூறு ஏற்படுத்தக்கூடாது - என்று உத்தரவிட்டார்.

இதேபோன்று, விகாரையின் காணி உரித்து தொடர்பான பிரச்னைகள் இருந்தால் நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் நீதிபதி அறிவுறுத்தினார்.

இந்த நிலையில், இந்த வழக்கின் தவணையை எதிர்வரும் 11ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும் என்றும் கட்டளை பிறப்பித்தார். (ஐ-03)

## வடக்கு...

அடுத்த வாரம் 11, 12, 13ஆம் திகதிகளில் இந்த பேச்சு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சில் பங்கேற்குமாறு வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி பணிமனையிலிருந்து அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அங்கஜன்...

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதன் எம். பியும் பங்கேற்றிருந்தார்.

அவர் போராட்டக்காரர்களுக்கு சிற்றுண்டிகளையும் மென்பானங்களையும் வழங்கியிருந்தார். இவற்றை போராட்டக்காரர்களில் ஒரு பகுதியினர் பெற்ற போதிலும் ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் மாத்திரம் அவற்றை தூக்கி வேலியோரமாக குப்பையில் வீசியிருந்தனர். அந்த சமயம் அங்கஜன் இராமநாதன் அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

இதேநேரம், அந்தக் கட்சியினரின் செயல்பாட்டை அங்கிருந்தவர்களும் கண்டித்தனர். ஆயினும் அதனை அவர்கள் பொருட்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இரவிரவாக...

தையிட்டியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணியில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த விகாரையை அகற்றவும் - அதை சுற்றியுள்ள சுமார் 100 பரப்பு காணியை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் மக்கள் நேற்று முன்தினம் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நேற்று முன்தினம் இரவும் இந்தப் போராட்டம் தொடர்ந்த நிலையில் அங்கு படைத்தரப்புகள் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டது. அத்துடன், போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கவும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது. அத்துடன், போராட்டத்தில் ஈடுபட்ட செ. கஜேந்திரன், பொன் மாஸ்ரர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், நேற்றைய தினம் போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு நேரில் சென்ற மல்லாகம் நீதிவான் அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்று அனுமதி வழங்கியதுடன் விகாரைக்கு எதிரில் போராடவும் அனுமதி வழங்கினார்.

இதையடுத்து நேற்று இரவும் மக்கள் திரண்டு போராட்டம் தொடர்ந்தது. ஆனாலும், பொலிஸார் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் விதமான செயல்பாடுகளை தொடர்ந்திருந்தனர். “நீதிமன்ற கட்டளையை மீறி நடமாடினால் கைது செய்யப்படுவீர்கள்”, என்று அவர்கள் போராட்டக்காரர்களை மிரட்டியதுடன் தொடர்ச்சியாக அவர்களை குழப்பும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வந்தனர்.

இதேசமயம், போராட்டம் ஆரம்பித்தது முதல் நேற்றைய தினமும் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செ. கஜேந்திரன் தொடர்ச்சியாக பங்கேற்றிருந்தார். அவருடன், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், எம். ஏ. சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ. சரவணபவன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன் உள்ளிட்ட பல அரசியல்வாதிகளும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். (ஐ - 03)

## 450 எரிபொருள் நிலையங்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு!



கொழும்பு, மே 05

450 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தலா 150 வீதம் மூன்றாக பிரிக்கப்பட்டு புதிய வெளிநாட்டு எண்ணெய் விநியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ளன என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்துக்குள் புதிய விநியோகத்தர்கள் இலங்கையில் வர்த்தக செயல்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளனர் என்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடன் நேற்று அவர் நடத்திய சந்திப்பில் தெரிவித்தார்.

புதிய விநியோகத்தர்களுக்கான சந்தைப்படுத்தல் பிரதிநிதிகளை ஒதுக்குவது, பயன்படுத்தப்படவுள்ள இயந்திரங்களை வகைப்படுத்துவது, புதிய உடன்படிக்கைகள், விலை சூத்திரம், புதிய விநியோகத்தர்களுக்கான நன்மைகள், சந்தைப்படுத்தல் பிரதிநிதிகளுக்கு கிடைக்கும் வருமானம், அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டன.

## வல்வையில்...

கள் செய்யப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆல யத்தின் பெருந்திருவிழாவில் இன்று தீர்த்தத் திருவிழா நடைபெறவுள் ளது. காலை 7 மணிக்கு கோயிலிலிருந்து அம்மன் புறப்பட்டு ஊறணி கடற் கரையை அடைந்து தீர்த்தமாடுவார். இதன் பின்னர் நெடியகாடு பிள்ளையார் கோயிலில் படையமர்ந்த பின்னர், நள்ளிரவு நேரம் அம்மன் புறப்பட்டு தனது இருப் பிடத்தை அடைவார்.

இதன்போது, வல்வெட் டித்துறை முழுவதும் மின் னொளியால் அலங்கரக்கப்பட்டும் பிற அலங்கார வேலைகள், வாணவேடிக் கைகள் மற் றும் இசை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஐ-02)

## யாழ்....

தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற இலங்கை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பலர் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு முறையற்ற விதத்தில் பொலிஸார் நடந்து கொண்டனர் என்றும் அங்கிருந்தோரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடுமாறு அங்கிருந்த வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா கூறியுள்ளார்.

தையிட்டியில் போராடி வரும் மக்களை படைத் தரப்புகள் முற்றுகையிட்டிருப்பதையும் -அவர்கள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்க்கப்படுவதையும் கண்டித்து அங்கிருந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்வதாக தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து தமிழரசு கட்சியின் எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் த. சித்தார்த்தன், சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் அங்கிருந்து வெளியேறினர். தொடர்ந்து அவர்கள் தையிட்டி விகாரைப் பகுதியில் நடைபெற்ற போராட்டத்திலும் பங்கு கொண்டனர்.

எனினும், அமைச்சரான ஈ. பி. டி. பியின் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை நடத்தியிருந்தார். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# செழிப்பான பாதையில் மீண்டும் இலங்கை பயணிக்க சந்தர்ப்பம்!

## சர்வதேச நாணய நிதியம் கருத்து




கொழும்பு, மே. 05

**இலங்கையை செழிப்பான பாதையில் மீண்டும் கொண்டு செல்ல முடியும் என சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆசியபசுபிக்கிற்கான இயக்குநர் கிருஸ்ணா ஸ்ரீனிவாசன் இதனை தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- இலங்கை ஒரு முக்கிய பிரச்னை உள்ள நாடு.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை அடிப்படையாகக் கொண்ட திட்டம் நுண் பொருளாதார ஸ்திரப்படுத்தல் பணவீக்கத்தை குறைத்தல் போன்றவற்றை வலியுறுத்துகின்றது.

நிதி ஒருங்கிணைப்பு வருவாய் ஒருங்கிணைப்பை அடிப்படையாக கொண்டது. வருவாய் திரட்டல், வரி வசூலிப்பு போன்றவற்றில் இலங்கை மிகவும் பின்னிலையில் உள்ளமைக்கும் இதுவும் ஒரு காரணம்.

கோவிட்டிற்கு முன்னர் அவர்கள் முன்னெடுத்த கொள்கைகளில் உள்ள தவறுகளே இதற்கு காரணம். அவர்கள் வரிச்சலுகையை வழங்கினார்கள்.

எனவே சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆதரவு திட்டம் என்பது வருவாய் அடிப்படையிலான ஒருங்கிணைப்பு ஆகும். இது பொருளாதாரத்திற்கு ஸ்திரத்தன்மையை வழங்குகின்றது.

இலங்கையில் மிகவும் உயர் நிலைக்குச் சென்ற பணவீக்கத்தை கட்டுப்படுத்த சர்வதேச நாணய நிதியம் விரும்புகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் ஆட்சி மற்றும் ஊழல் விவகாரங்களுக்கும் தீர்வை காணமுயல்கின்றது

ஆட்சி மற்றும் ஊழல் விவகாரம் குறித்து ஆழமான கண்டறிதலை மேற்கொண்ட முதல் நாடு இலங்கை.

இது இலங்கை வறியவர்கள் மற்றும் நலிந்தவர்களுக்கு எவ்வாறு உதவவேண்டும் என்பதை மையப் படுத்திய திட்டம்.

தனியார் கடன்வழங்குநர்கள், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களை உள்ளடக்கிய கடன்வழங்குநர்களுடன் கடன் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான நல்லெண்ண முயற்சிகளை இலங்கை அடுத்த கட்டமாக மேற்கொள்ளவேண்டும்- என்றார். (அ)

# சீனி விலை உயரலாம்!

கொழும்பு, மே. 05

எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் சீனியின் விலை மேலும் அதிகரிக்கலாம் என அத்தியாவசிய இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து சீனி இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட ஒதுக்கீடு காலாவதியானதும் இதற்கு ஒரு காரணம்.

அதன்படி, தற்போது பிரேசில் உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து சீனி இறக்குமதி செய்யப்படுகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ சீனியின் மொத்த விலை 230 ரூபாயாக இருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் ஒரு கிலோ சீனியின் மொத்த விலை 250 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படாவிட்டாலும், சுமார் 2 மாதங்களுக்கு போதுமான சீனி தற்போது நாட்டில் உள்ளதாக அத்தியாவசிய இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

மற்ற நாடுகளில் இருந்தும் சீனி தொடர்ந்து இறக்குமதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

# லண்டன் பறந்தார் ரணில்

கொழும்பு, மே. 05

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று அதிகாலை இங்கிலாந்துக்கு பயணமானார்.

பிரித்தானியாவின் மூன்றாம் சாள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சென்றுள்ளார்.

ஜனாதிபதியுடன் மேலும் 8 பேர் நாட்டிலிருந்து பயணித்துள்ளனர் என கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கடமை நேர முகாமையாளர் குறிப்பிட்டார்.

பிரித்தானியாவின் மூன்றாம் சாள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா நாளை இடம்பெறவுள்ளது. (அ)

# பதில் நிதி அமைச்சராக ஷெஹான் சேமசிங்க



கொழும்பு, மே. 05

பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பதவிப் பிரமாணம் செய்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று காலை லண்டன் சென்றதை அடுத்து, பதில் அமைச்சராக ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டார் என நிதிய மைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலி!

மட்டக்களப்பு, மே. 05

கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் வாகனேரியில் காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுற்றுலா விடுதி, வாகனேரியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான க.ஜெயந்தன் (வயது-24) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை வழக்கம் போல் மாடு கட்டுவதற்கு சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியில் வீட்டுக்கு அருகாமையில் நின்ற யானையே இவரை தாக்கியுள்ளது. சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற வாழைச்சேனை பொலிஸார், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், திடீர் மரண விசாரணை அதிகாரி வ.இரமேஸ் ஆனந்தன் ஆகியோர்கள் சடலத்தை பார்வையிட்டனர்.

இதன் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும் கடந்த 3 நாட்க்களுக்கு முன்பும் வீதியால் சென்ற நபர் ஒருவரை துரத்தி தாக்கியதாகவும் அதிஷ்டவசமாக அவர் யானையின் தாக்குதலில் இருந்து உயிர் தப்பியதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (அ)

# அரசியல் வேறுபாடின்றி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து

கொழும்பு, மே. 05

அரசியல் வேறுபாடின்றி மக்கள் நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர்களின் தொழில் சார் முன்னேற்றங்களுக்காக ஆயிரத்து 650 மில்லியன் ரூபா வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்திருப்பதாகவும், அதேபோன்று வடக்கு-கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கான வீடமைப்பு மற்றும் வாழ்வாதார உதவிகளுக்காக சீனா 1500 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவும் பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

எமது மக்களுக்கு கிடைக்கின்ற இவ்வாறான வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதில் அரசியல் பாகுபாடு எதுவும் இருக்காது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வெசாக் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு!

கொழும்பு, மே 05

வெசாக் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள விகாரைகளை அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வெசாக் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனிடையே அநுராதபுரம் புனித பூமி மற்றும் நாடளாவிய ரீதியிலுள்ள விகாரைகளை அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வெசாக் வலயத்தை அண்மித்த பகுதிகளில் இன்று வெள்ளிக்கிழமை முதல் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது. பொலிஸார் விசேட கவனம் செலுத்தி பாதுகாப்பு திட்டங்களை முன்னெடுத்துள்ளனர். வெசாக் வலயங்களை அண்மித்த பகுதிகளில் பாதுகாப்பு அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுவதோடு சிவில் உடைகளிலும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவார்கள்.

பொதுமக்களின் இலகு போக்குவரத்துக்காக பொலிஸ் போக்குவரத்து அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வீதி தடைகள் இடப்பட்டுள்ளன. விசேடமாக அநுரதபுரம் மகாபோதி மற்றும் அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனை தவிர மிகிந்தலை பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு முக்கிய விகாரைகளை அண்மித்த பகுதிகளில் பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துக்காக விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஐ)

# ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்குள் திடீரென வெடித்த கைத்துப்பாக்கி!

## பொலிஸ் கான்ஸ்டபிள் படுகாயம்!!

மட்டக்களப்பு, மே. 05

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கைத்துப்பாக்கி தவறுதலாக வெடித் ததில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு வீதி ரோந்து கடமைக்காக கைத் துப்பாக்கி வழங்கப்பட்டிருந் தது.

அவர் சம்பவதினமான புதன்கிழமை அதிகாலை 3 மணிக்கு கடமையை முடித் துக்கொண்டு அந்த கைத் துப் பாக்கியை ஆயுத களஞ்சியப் பொறுப்பாளரிடம் வழங்க முற்பட்டபோது அது தவறு தலாக வெடித்தது.

இதன்போது, களஞ்சியப் பொறுப்பாளரான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் காலில் துப்பாக்கிச் சூடு ஏற்பட்ட தையடுத்து, படுகாயமடைந்த அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மின்கசிவால் முற்றாக எரிந்து நாசமான வீடு!

## கோப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே. 05

கோப்பாய் பகுதியில் மின் னொழுக்கு காரணமாக ஏற்பட்ட விபத்தால் வீடு ஒன்று சேதமடைந்துள்ளது. இந்த சம்பவம் கடந்த செவ்வாய் மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் வீட்டில் இருந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடும் முற்றாக சேதமடைந்துள்ளது. வீட்டில் இருந்த உடைகள் மற்றும் உபகரணங்கள் என்பன முற்றாக சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.